
நகரத்தார் குரல்


(சமூக இலக்கிய மாத இதழ்)



கங்கை அணிந்திடும் செஞ்சடையான் - அறம்
காட்டும் விடையுடன் காட்சிதந்தான்
மங்கல மான சிவம் பெருக - இன்று
வாயார வாழ்த்துவோம் வாருங்களே.

நவம்பர் 1990

பதினோராவது ஆண்டு நினைவாஞ்சலி



தோற்றம்: 29-12-1924

மறைவு: 26-12-1979

திரு. ஏ ஆர். இராமசாமி செட்டியார் அவர்கள்

முன்னாள் நிர்வாக இயக்குநர் : ஸ்ரீ விசாலம் சிட் பண்ட் லிமிடெட்

முன்னாள் இயக்குநர் : தி நெல்லை ஃபைனான்ஸ் (பி) லிமிடெட்

முன்னாள் இயக்குநர் : அருணா கெமிக்கல்ஸ் & பார்ம்ஸ் (பி) லிமிடெட்

முன்னாள் உரிமையாளர் : ஸ்ரீ விசாலம் பைனான்சியர்ஸ்

முன்னாள் நிர்வாக உரிமையாளர்: ஸ்ரீ கோகுலம் பண்ணைகள்

முன்னாள் அறங்காவலர் : ஸ்ரீ விசாலம் அறக்கட்டளை

ஓங்கு புகழ் விசாலம் சிட் பண்ட் சிறக்க
பாங்குடன் பணி செய் அன்பர் - நீங்கா
நினைவுடன் இணையிலா நின் தாளில்
பணிவுடன் வைத்தோம் அஞ்சலி.

என்றும் தங்கள் நினைவை மறவாத :

மகன் : ராம. அருணாசலம், மருமகள்,
மகள்கள், மருமகன்கள், பேரக் குழந்தைகள்
மற்றும் மேற்கண்ட நிறுவனங்களின் அலுவலர்கள்.

உ
சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 9
ஒலி 10

பிரமோதூத
ஐப்பசி

நவம்பர்
1990

மாலுக்கு வையம் அளந்த மணாளற்கு
நீலக் கருநிற மேக நியாயற்கு
கோலச் செந் தாமரைக் கண்ணற்கு என் கொங்கலர்
ஏலக் குழலி இழந்தது சங்கே.
— நம்மாழ்வார் திருவாய் மொழி.

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்


துணை ஆசிரியர்:
எல். சுந்தரம்

அலுவலகம் :
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625 001

தொலைபேசி p. p. 26668

ஆண்டுச் சந்தா ரூ. 24-00 டெபாசிட் சந்தா ரூ. 200-00

காணக் கிடைக்காத காட்சி!



காரைக்குடி கம்பன் திருநாள் கவியரங்கம் ஒன்றில் எடுக்கப் பெற்ற பழைய படம் இது. (எந்த ஆண்டு என்பது தெரியவில்லை)

படத்தில் நடுவில் இருப்பவர் கவியரங்கத் தலைவர் திரு. கொத்த மங்கலம் சுப்பு அவர்கள். இவருக்குக் 'கொசு' என்ற புனைப் பெயரும் உண்டு. ''தில்லானா மோகனாம்பாள்'' போன்ற சில நல்ல கதைகளை எழுதியவர் இவர். பெரிய கவிஞரும் கூட.

முதல் வரிசையில் (இடமிருந்து வலமாக) திருவாளர்கள் முனைவர் தமிழண்ணல், சொ. சொ. மீ. சுந்தரம், எஸ். கே. ராமராஜன், கொத்தமங்கலம் சுப்பு (தலைவர்), அரு. நாகப்பன், பசுபதி, முனைவர் அர. சிங்காரவடிவேலன்.

பின் வரிசை (இடமிருந்து வலமாக) திருவாளர்கள் இளங்கம்பன், மரியதாஸ், அரு. சோமசுந்தரன், மா. கண்ணப்பன்.

படத்தில் பலர் அடையாளம் தெரியாத வகையில் இளமையாக இருக்கிறார்கள்.

படம் உதவி:
'மக்கள் கவிஞர்' திரு. அரு. நாகப்பன்



பொன். புதுப்பட்டி எஸ்பி. முத்துராமன் செட்டியார் அவர்கள் பேத்தியும் திரு. மு. சுப்பிரமணியன் செட்டியாரின் புதல்வியுமான செல்வி வள்ளியம்மை B. E. க்கும் கண்டவராயன்பட்டி எஸ். மாணிக்கம் செட்டியார் அவர்களது புதல்வன் செல்வன் சீனிமுகேஷ் B. E. க்கும் பொன். புதுப்பட்டியில் 3-9-90 அன்று திருமணம் சிறப்பாக நடை பெற்றது. திருமணத்தில் தொழிலதிபர்கள், வணிகர்கள், நண்பர்கள் பெருமளவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

மணமக்களுடன் நமது இதழின் ஆசிரியர் திரு. வி. என். சிடி. திரு. எஸ்பி. முத்துராமன் செட்டியார் திரு. ஏஎல். பெரிய கருப்பன் ஆகியோர் உள்ளனர்.



மணமகன் செல்வன் சீனிமுகேஷுடன் முன்னாள் தமிழக அமைச்சர் திரு. எஸ். மாதவன், திரு. எஸ்பி. முத்துராமன் செட்டியார்.

முரு. இராம. இராமநாதன் செட்டியார் : அறங்காவலர் குழுத் தலைவர் !

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலின் அறங்காவலர் குழுத் தலைவராக தொழிலதிபர் முரு, இராம. இராமநாதன் செட்டியார் அவர்கள் தேர்வு செய்யப் பெற்றிருக்கிறார்கள்.

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலின் அறங்காவலர் குழு உறுப்பினர்களாக திரு. முரு. இராம. இராமநாதன் செட்டியார், திரு. சி. சின்னசாமி திரு. சோ. பால்ராஜ் எம். எல். ஏ., திரு. பொன்னுசாமி சமயநல்லூர் திரு. செல்வராஜ் ஆகியோரைத் தமிழக அரசு நியமித்தது.



அறங்காவலர் குழுத் தலைவர் தேர்தல் 29-10-90 அன்று ஆலயத்தில் உதவி ஆணையர் திரு. செல்லச்சாமி முன்னிலையில் நடைபெற்றபோது குழுத் தலைவராக இராமநாதன் செட்டியார் அவர்கள் தேர்வு செய்யப்பெற்றார்கள். அவருக்கு இணை ஆணையர் திரு. பாலசுப்பிரமணியம் மற்றும் பலர் வாழ்த்துத் தெரிவித்தனர்.

அறங்காவலர் குழுத் தலைவர் இராமநாதன் செட்டியார் அவர்கள் மீனாட்சி அம்மன் ஆலய மேம்பாட்டுக்கான திட்டங்களை அனைவரது ஒத்துழைப்புடன் பொது மக்கள் பயனடையும் விதத்தில் செய்யப் போவதாக உறுதி கூறினார்.

வாழ்க்கைக் குறிப்பு

திரு. இராமநாதன் செட்டியார் நடராஜபுரத்தில் பிறந்தவர். வயிரவன் கோவிலைச் சேர்ந்தவர். மதுரை மத்திய அரிமா சங்கத்தின் முன்னாள் தலைவர்; நடராஜபுரம் விவசாய நாணய சங்கத்தின் முன்னாள் தலைவர்; நடராஜபுரம் ஊராட்சி மன்றத்தின் முன்னாள் தலைவர். பல பொது நிறுவனங்களோடு தொடர்புடையவர். சமுதாயத் தொண்டர். பண்பாளர்.

இவர்களது துணைவியார் திருமதி தெய்வானை ஆச்சி அவர்கள் மதுரை மத்திய அரிமா மகளிர் சங்கத்தின் முன்னாள் தலைவி.

திரு. முரு. இராம. இராமநாதன் செட்டியார் அவர்களுக்கு நமது நல் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதோடு மீண்டும் நகரத்தார் ஒருவரை அறங்காவலர் குழுத் தலைவராக நியமித்த தமிழக அரசுக்கும் குறிப்பாக தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களுக்கும் நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

செட்டாக வாழ்வதே சிறந்த செல்வம். ஊக்கத்துடன் உழைக்கும் பழக்கம், உயர்ந்த செல்வம்.

— வெற்றிச் சிந்தனை

எமது

நல்வாழ்த்துக்கள்!

குருவருளே திருவருள்....

டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர் ஒருவருக்குப் புத்தகமொன்றை இரவல் கொடுத்திருந்தார். இரவல் வாங்கிச் சென்றவர் ஒரு நாள் உ. வெ. சா. வைக் காண வந்தார்; ஆனல் புத்தகத்தைக் கொண்டுவரவில்லை. அப்போது சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்த உ. வே. சா., அவரைப் பார்த்து ''நீங்கள் புத்தகம் வாங்கிச் சென்று பல மாதங்கள் ஆகிவிட்டனவே. அதை நீங்கள் திருப்பித்தரவுமில்லை; நான் உங்கள் பெயரைக் குறித்துக் கொள்ளவுமில்லை. உங்கள் பெயரை இப்போதாவது சொல்லுங்கள். குறித்துக் கொள்கிறேன்'' என்றார்.

வந்தவர் ''என் பெயர் மீனுட்சிசுந்தரம்'' என்றார். அவ்வளவுதான். உ. வே. சா. இருப்பிடத்திலிருந்து எழுந்தார். புத்தகம் வாங்கியவரின் அருகில் வந்தார். ''புத்தகத்தைத் திருப்பித்தராவிட்டாலும் பரவாயில்லை; நீர் வாழ்க'' என்றார்.

வந்தவர் ''புத்தகத்தை நான் திருப்பித்தராதபோதும் என்னை வாழ்த்துகிறீர்களே. எனக்கு ஒன்றும் புரியவில்லையே!'' என்றார்.

''உம் பெயர் என் ஆசிரியர் பெயராக இருப்பதால் உமக்கு இந்த மரியாதை'' என்றார்.

உ. வே. சா. இதற்கும் மேலாக தாம் கட்டிய இல்லத்திற்கு மீனுட்சி சுந்தரம் பிள்ளை நினைவாக 'மீனுட்சி சுந்தரம் இல்லம்' எனப் பெயர் சூட்டினார்.

அதே போல நமது டாக்டர் வ. சுப. மாணிக்கனர் அவர்கள் தம் ஆசிரியர் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்களிடம் கொண்ட தணியாத ஈடுபாட்டைக் காட்டிட காரைக்குடியில் கட்டிய தமது இல்லத்திற்கு 'கதிரகம்' எனப் பெயர் சூட்டிப் பெருமை கொண்டார்கள்.

— புலவர்மாமணி மா. முத்துராமன்

(கோவிலூரில் 28-9-90 அன்று நடைபெற்ற கோவிலூர் ஆதீனம் தவத்திரு காசிவிஸ்வநாத ஞான தேசிக சுவாமிகளின் நான்காம் ஆண்டு பீட ஆரோஹண விழாவில் பேசியது.)

உங்களுக்குத் தெரியுமா?

- வெப்பம், மின்சாரத்தைக் கடத்தாத பொருள் மைக்கா.
- நீர் உறையும்போது அதன் எடை அதிகரிக்கும்.
- அன்னமும், கழுகும் நூருண்டு கூட வாழும்.
- ரத்தம் உடல் எடையில் 12ல் ஒரு பங்கு ஆகும்.
- எறும்புக்குக் கால்கள் ஆறு.
- சந்திரனைப் போல் பூமி நான்கு மடங்கு பெரியது.
- மழை நீரில் வைட்டமின் B 12 உள்ளது.
- கங்கை உற்பத்தியாகும் இடம் கோமுகம்.
- உலகின் ஒரே நாத்திக நாடு அல்பேனியாதான்.
- கிருஷ்ணர் மறைவிற்குப் பின் ருக்மணி தீக்குளித்தாள்.

— வி. ஆர். சின்ன அருணுசலம், தேவகோட்டை

கோவிலூரில் விழா

கோவிலூர் ஆண்டவர் மன்றத்தின் தலைவர் தவத்திரு காசிவிஸ்வநாத ஞானதேசிக சுவாமிகள் அருளாட்சியின் நான்காம் ஆண்டு நிறைவு விழா 28-9-90 அன்று கோவிலூரில் சிறப்பாக நடைபெற்றது. கோவிலூர் ஆதீனகர்த்தர் முன்னிலையில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் விழாவினைத் தொடங்கி வைத்தார். காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. கவிஞர்கள் மீனவன், தேவமூர்த்தி, இராகவன்முத்து, சபா. அருணசலம், கா. நாகப்பன், இராம. வீரப்பன் சவகர்லால், முருகசாமி, புலவர் மாமணி மா. முத்துராமன் ஆகியோர் கவி பாடினர். மாலையில் பஜனை நடைபெற்றது.

துலாவூரில் நடன நிகழ்ச்சி

தேவகோட்டையைச் சேர்ந்த செல்வி மாலதி இராமநாதனின் நடன நிகழ்ச்சி துலாவூரில் 5-10-90 குருபூசை அன்று மாலையில் 'அறமனச்செம்மல்' அலவாக் கோட்டை நாக. இராமநாதன் செட்டியார் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன், 'பழம் நீ' திரு. லெ. மு. மு. முத்துமாணிக்கம் ஆகியோர் பாராட்டிப் பேசினர். தலைவர் பொன்னுடை போர்த்தி வாழ்த்தினர். தலைவர் வழங்கிய ரூ. 101 அன்பளிப்பை இரசிகமணி திரு. இராம. சிதம்பரம் செட்டியார் வழங்கி ஆசி கூறினர். திரளமான மக்கள் நிகழ்ச்சியைக் கண்டு களித்தனர்.



பட்டமங்கலம் திரு. வீர. நா. சித. இராமநாதன் செட்டியார்-திருமதி வள்ளியம்மை ஆச்சியின் 60 ஆம் ஆண்டு நிறைவு மணி விழா பட்டமங்கலத்தில் 16-9-90 அன்று சிறப்பாக நடைபெற்றது.

'நானும் ஒரு நகரத்தார்'...

தமிழண்ணல்

11. மேடை அலங்காரப் பேச்சும் நடைமுறை உண்மையும்

நகரத்தார்களுடைய பழக்க வழக்கங்கள் பல, பிற சமூகத்தவர் பழக்கங்களிலிருந்து வேறுபட்டவை. பெண்களுக்குத் திருமணம் நடைபெற வேண்டுமென்றால், 'அதைத்தர வேண்டும். இதைத் தர வேண்டும்' என்று மணமகன் வீட்டார் பெண் வீட்டாரை வற்புறுத்துவது தவறு. திருமணம் முடிந்த பிற்பாடும் தொடர்ந்து நடைபெறும் 'வசூல்கள்' தவிர்க்கப்பட வேண்டும்.

எனக்குத் தெரிந்த ஒரு பெரிய ஆச்சி ''வாங்கியா நிரம்பப் போகிறது; தந்தது போதும் என்று திருப்தியடைய வேண்டும்'' என்றார். இதுகூட அவர் பேச்சுக்குச்



டாக்டர் ராஜா சர் மு. அ. முத்தையாச் செட்டியார் அவர்கள் குமாரர் டாக்டர் மு. அ. மு. இராமசாமிச் செட்டியார் அவர்களுக்கும் துணைவியார் திருமதி சிகப்பி இராமசாமி அவர்களுக்கும் 8–10–90 அன்று சிதம்பரம் தெற்குரத வீதி வெ. சா. விடுதியில் 59 ஆம் ஆண்டு நிறைவு விழாச் சிறப்பாக நடைபெற்றது.

சொன்னதுதான். 'வாங்கும் ஆசை' சூதில் ஏற்படும் காதல் போன்றது. 'இழந்தொறூம் காதலிக்கும் சூதே போல்' என்ற வள்ளுவர் வாக்கு, இங்கும் பொருந்தும். ஒரு பெண்ணைத் திருமணம் செய்துதர வேண்டுமேல், அவளைப் பெற்றவர்கள் ஓரளவேனும் தம் பெண்ணுக்காகச் செலவுசெய்ய வேண்டியிருக்கிறது. வசதி மிக்கவர்கள், தம் ஆண்மக்களுக்கே சொத்தில் வாரிசு உரிமை போவதால், பெண்ணுக்கு நன்கு கொடுத்து நிறையச் செலவழித்து திருமணம் செய்துவைக்கிறார்கள். இதில் எது தவறு?

ஆர அமரச் சிந்திக்கவேண்டும்; சிந்தித்துப் பதில் சொல்லுங்கள்!

பலதரப்பட்ட நிலைகள்

சமூகம் பலதரப்பட்ட மக்களைக் கொண்டது. மிகுவசதி படைத்தவர், வசதி படைத்தவர், நடுத்தர வகுப்பினர், வசதி குறைந்தவர், ஏழைகள் என அடுக்கலாம். அவரவர் நிலைக்கேற்ற திருமணம் என்றில்லாமல், எல்லை கடந்து கடன் வாங்கித் திருமணம் செய்தும் - அங்ஙனம் செய்ய முடியாததால் பெண்கள் பலர் மணமே ஆகாமலும் - வாடுகிற நிலைகள் பரவலாகக் காணப்படுகின்றன. இதற்குப் பரிகாரம் என்ன?

பெண்களை நன்கு படிக்க வைக்கவேண்டும். பெண்கள் வேலை பார்த்துத் தம் காலில் நிற்பவர்களாக உயர வேண்டும். பெண் கல்வி உயர உயரப் பல சமூகத் தீங்குகள் தாமே அகலும்.

அடுத்து 'கொடுக்கல் வாங்கல்கள்' - மறைமுகமாக நடைபெறட்டும். ஒருவர் தன் மகனுக்கு என்ன என்ன சொத்துகள் வைத்து விட்டுப் போகிறார் என விளம்பரமா செய்கின்றனர்? பெண்ணுக்குக் கொடுக்கிறதை மட்டும் சாமான் பரப்பியும், விளம்பரப் படுத்தியும் ஏன் செய்ய வேண்டும்? ஆணுக்கு மட்டும் தன் சொத்தைச் சத்தமில்லாமல் விட்டுப் போகும் தந்தை, பெண்ணுக்குத் தருவனவற்றை மட்டும் ஏன் விளம்பரப் படுத்த வேண்டும்?

பெண்களின் சொத்துரிமை

தந்தை தேடிய சொத்து, கூடுதலாக இருந்தால் அதில் பெண்ணுக்கும் ஒரு பங்கு போய்ச்சேர்வது எந்த வகையில் தவறாகும்? இன்று சட்டப்படி! சொத்துரிமையும் வந்துவிட்டதே. எனவே **விளம்பரப் படுத்துவது-சாமான் பரப்புவது - தோதுச் சீட்டு எழுதுவது - சரிபார்த்துச் சரிபார்த்து வாங்குவது - காலச் சூழல் தெரியாமல் வாங்குவது கொடுப்பதை 'விதி' யாக்கி 'ரூல்ஸ்' பேசி சண்டை பிடிப்பது:** இவைதான் கடுங்குற்றங்கள்.

பிள்ளைமார், முதலியார் வீடுகளில் 'டாக்டர்' மாப்பிள்ளை என்றால், பல லட்சத்தில், வீடு வாங்கிக் கொடுக்கிறார்கள்; புதுக் கார் வாங்கித் தருகிறார்கள். அங்கு இதை விதி ஆக்காமல், வசதியுள்ள தந்தை தன் பெண்ணுக்குப் பரிசு தருகிறார். காதும் காதும் வைத்தாற்போல், விளம்பரமின்றிச் செய்வதால். அது 'இல்லாதவர்களை' அதிகம் பாதிப்பதில்லை.

சீர்தனமும் மாமியார் சாமானும்

காவிரிப்பூம்பட்டினத்தில் பழ. **கருப்பையா அவர்கள்** 'சீர்தனம்' கொடுப்பது தவறன்று; 'மாமியார் சாமான் கொடுப்பதே தவறு' என்று பேசி இருப்பதைக் கவனித்தீர்களா? அவர் எதையும் நுட்பமாகக் கவனித்து எடுத்துக் கூறும் சிந்தனையாளர். பெண்

ணுக்குத் தன் தகுதிக்கேற்ப ஒரு தந்தை தரும் சீர்தனங்கள் குற்றமுடையன அல்ல. ஆனால், எப்படியோ மாமியாருக்கும் நாலு சாமான் பரப்பத் தொடங்கி, பிறகு மாமியார் சாமானுக்கு எனப் பணத்தை அதில் வைத்து, அதுவே இன்று பூதாகாரமாகிவிட்டது. அதிலும் ஒரு லட்சத்து ஐயாயிரம் என்றால் அறுபதும் நாற்பத்தைந்தும் ஐம்பதும் ஐம்பத்தைந்தும் என்று இப்படிப் பிரிக்கிறார்கள். மாமியார் சாமான் பணத்தில், பெண்ணுக்கு 'ஈடுபொன்' கொடுக்கிறார்கள்; பெண்ணுக்குப் பட்டுக் கண்டாங்கி வாங்கி வைக்கிறார்கள். பல மாப்பிள்ளை வீட்டார், மாமியார் சாமானுக்காக வாங்குவதைவிடக் கூடவே செலவு செய்கிறார்கள். பிற சில சமூகங்களில் ஆணைப் பெற்றவர்கள், வரதட்சணை வாங்கித் தங்கள் சொந்தச் செலவுக்குக்கூட வைத்துக்கொள்கிறார்கள். அந்தப் பழக்கம் நம்மவரிடம் அறவே கிடையாது. அதோடு, மாப்பிள்ளையின் சொந்தச் செலவுகட்கென்றும் 'வசூல்' செய்கிற பழக்கமெல்லாம் நம்மவரிடம் கிடையாது. எங்கேனும் ஒன்றிரண்டு இடங்களில் தவறு நடக்கலாம். அதனால் நகரத்தார் சமூகத்தில் உண்மையிலேயே உள்ள குறை என்ன? அதை அகற்ற வழி என்ன? என்றுதான் தேட வேண்டும். திருச்சி நகரத்தார் சங்கத்தினர் கொண்டுவந்திருக்கும் கூட்டுத் திருமணத் திட்டம் மிகச்சிறந்த திட்டமாகும். நம் பெண்களுக்குக் கல்வி வாய்ப்பு; நம்மவர்களுக்கு வேலை வாய்ப்பு; நம்மவர்களுக்குத் தொழில் உதவி என்று ஆக்கபூர்வமான வழிகளில்தான் இனிச் சிந்திக்க வேண்டும்.

1. நம் பையன்கள்; பெண்கள் அனைவரும் நூற்றுக்கு நூறு விரும்பிய படிப்பைப் படிக்க வாய்ப்புக்களை உருவாக்குவ தெவ்வாறு?

பொறியியல், மருத்துவஇயல், வணிகஇயல், ஆட்சியியல், கணிப்



மேலைச்சிவபுரி ஆ. ராம. பழநியப்ப செட்டியார் அவர்களின் புதல்வி செல்வி முத்தாத்தாள் என்கிற மீனாட்சி D. E. C E. க்கும் மேற்படியூர் கரு. ஆண்டியப்ப செட்டியார் அவர்களின் புதல்வன் செல்வன் இளங்கோ என்ற நாகப்பன் B E க்கும் 26–8–90 அன்று மேலைச்சிவபுரியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

பானியல், அனைய படிப்புகளில், இடமில்லாமல் பின்தங்கிப் போயினர் என்றில்லாமால் வாய்ப்புக்களை உண்டாக்கித் தருவது எவ்வாறு?

நூற்றுக்கு நூறு சதவிகிதம் பெண்களும் இந்தப் படிப்பெல்லாம் படிக்க என்ன வழி?

2. நம்மவர்களுக்கு வேலை வாய்ப்புத் தேடுவதில் எவ்வெவ்வாறு உதவலாம்? I. A. S, I. P. S. போன்ற தேர்வுகளில் தேர்ச்சி பெற, மாநிலப் பொது அரசுப் பணிகளில் இடம்பெற, வங்கிகளில் சேர எவ்வெவ்வாறு உதவலாம்?

3. தொழில் செய்வதில் எவ்வெவ்வாறு உதவலாம்? எத்தகைய தொழில்களில் ஈடுபடலாமென, அனுபவம் பெற்றவர்கள் ஆலோசனை கூறலாமே! தொழில் நாட்டமுடையவர்களுக்குப் பண உதவி; வங்கி உதவி தேடித் தரலாமே!

எனவே ஆக்கபூர்வமான வழிகள் பற்றிச் சிந்திப்போம்; அலங்காரப் பேச்சுக்களைத் தவிர்ப்போம். பகட்டு, வீண் கவுரவம், பொய்ப் புகழ் போன்றவற்றை அறவே ஒழிப்போம். சீர்திருத்தம் படிப்பதை இதனோடு நிறுத்திக் கொண்டு, 'நாமும் நகரத்தாராகப்' பிறந்த சிறப்பையே இனிச் சிந்திப்போம். அடுத்த இதழிலிருந்து அதைத் தொடங்குவோம்.

(வளரும்..)

அன்னை தெரசா இல்லத்தில் தீபாவளி

இந்த ஆண்டு தீபாவளியை நகரத்தார் இளைஞர்கள், மதுரை பாத்திமா கல்லூரி அருகில் உள்ள அன்னை தெரசா இல்லத்தில் கொண்டாடினார்கள். இந்த இல்லத்தில் பார்வையற்றோர், ஊனமுற்றோர், வயதானோர் மன நோயாளி, கணவரால் கைவிடப்பட்ட பெண்கள் அனுதை உள்பட 200பேர் உள்ளனர். இங்கு உள்ள அனைவருக்கும் திரு. ஏ. எஸ். ஏ. முத்தையா, திரு. சந்திரன் ஆகியோர் இனிப்புகள் வழங்கி, வாண வேடிக்கைகளை நிகழ்த்தினர். அதன்பின் நடந்த கூட்டத்திற்கு நகரத்தார் இளைஞர் சங்கத்தின் துணைத்தலைவர் திரு. பழ. மெய்யப்பன் தலைமை தாங்கினார். பேராசிரியர் திரு. நா. வெங்கடாசலம் சிறப்புரை நிகழ்த்தினார். அனைத்து ஏற்பாடுகளையும் நகரத்தார் இளைஞர் சங்கப் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் திரு. பழ. இராமசாமி செய்திருந்தார்.

சென்னை வடபழனியில் மகர்நோன்பு விழா

சென்னை வடபழனி நகரத்தார் நற்பணி மன்றத்தினர் மகர் நோன்பு விழாவை 29-9-90 விஜயதசமியன்று வடபழனி அருள் மிகு வலம்புரி சிந்தாமணி விநாயகர் ஆலயத்தில் சிறப்பாகக் கொண்டாடினுர்கள்.

அன்றைய தினம் காலையில் ஆலயத்தில் விநாயகருக்கு அபிஷேக ஆராதனைகள் நடத்தி, மாலையில் துர்க்கை அம்மனை எழுந்தருளச் செய்து பாரிவேட்டை உற்சவம் நடத்தி, நம் நகரக் கோவில்களில் நடப்பது போன்று அம்பு போடும் விழாவையும் விமரிசையாக நடத்தினுர்கள்.

மன்றத்தின் கௌரவத் தலைவரும் மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலின் முன்னாள் தக்காருமான வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்களும் மற்றொரு கௌரவத் தலைவர் எஸ்பி. பழனியப்ப செட்டியார் அவர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

பட்டமங்கலத்தில் மணி விழா

பட்டமங்கலத்தைச் சேர்ந்தவரும் கல்யாண் லேனு அறக்கட்டளையின் துணைத் தலைவருமான திரு. வீர. நா. சித. இராமநாதன் செட்டியார்-திருமதி வள்ளியம்மை ஆச்சியின் 60ஆம் ஆண்டு நிறைவு மணிவிழா 16-9-90 அன்று பட்டமங்கலத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இம்மணிவிழாவில் தி. மு. க. பிரமுகர் திரு. அன்பில் தர்மலிங்கம், தொழிலதிபரும் மதுரை நகரத்தார் சங்கத்தின் தலைவருமான திரு. லெ. நாராயணன் செட்டியார், மதுரை வங்கியின் தலைவர் திரு. சுப. சபாபதி கருங்குளம் திரு. இராம. ரெங்கநாதன் செட்டியார் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் முன்னுள் துணைவேந்தர் திரு. இராம. சேதுநாராயணன் மற்றும் தொழிலதிபர்கள், வணிகர்கள் நண்பர்கள் பெருமளவு கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

கல்யாண் லேனு அறக்கட்டளையின் சார்பாக மணிவிழா நன்கொடையாக தொழிலதிபரும் திருச்சி வி கே யென் ஸ்ட்ரச்சுரல் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநருமான திரு. எல். கண்ணப்பன் பட்டமங்கலத்திலும் பட்டமங்கலத்தைச் சுற்றிலுமுள்ள பதினெரு பள்ளிகளுக்கு ரூ. ஆயிரம் வீதம் 11,000/ ரூபாயும் பொதுமக்கள் 300 பேருக்கு குடமும் 100 பேருக்கு வேட்டியும் 100 பேருக்கு சேலையும் வழங்கியிருக்கிருர். அத்துடன் பொதுமக்களுக்காக பட்டமங்கலத்தில் ஆழ்துளைக் குழாய்க் கிணறு ஒன்றையும் ஏற்படுத்தியிருக்கிருர். இவ்விழாக்களில் திரு. அன்பில் தர்மலிங்கம் கலந்துகொண்டு சிறப்பித்தார். மக்கள் கவிஞர் திரு. அரு. நாகப்பன் மணிவிழாத் தம்பதியரை வாழ்த்தியும் திரு. அன்பில் திரு. எல். கண்ணப்பனைப் பாராட்டியும் பேசினர்.

தாய் மொழி வழிக் கல்வி

(ஏ. முத்துராமன், மேலைச்சிவபுரி)

'தன்னேரில்லாத் தமிழ்' என்று பண்டைப் புலவர்களாலும், 'தமிழ் மொழி போல இனிதாவதெங்கும் காணோம்' என்று பன் மொழி அறிந்த பாரதியாராலும் தமிழ் மொழி பாராட்டப் பெற்றது. மலையாளத்தில் தகளியைப் போன்றவர்கள்கூட, தமிழ் மொழிக்கு இரண்டாயிரம் ஆண்டுப் பாரம்பரியம் இருப்பது அந்த மொழியின் சிறப்பு - பெருமை என்று கூறியிருக்கிறார்கள்.

டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர் அவர்கள் பழங்கால ஓலைச் சுவடிகளை எல்லாம் அரும் பாடுபட்டு, தேடி எடுத்து, அப்படியே பெயர்த்துக் காகிதத்தில் அச்சிட்டு உதவினார்கள். பல தமிழ்ச் சங்கங்களாலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் போன்ற கல்வி நிறுவனங்களாலும், புலவர்களாலும் தமிழ் வளர்ச்சி அடைந்தது.

''சைவமும் தமிழும் தழைத்து இனிது ஓங்குக'' என்ற குறிக்கோளுடன், நீண்டகாலமாக, மேலைச் சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரியும், நல்ல தமிழறிஞர்களை நாட்டுக்கு அளித்து வருகிறது. தொல்காப்பியர் நூலகத்தைக் கொண்டும் ஆண்டுதோறும் சிறந்த தமிழறிஞர்களைக் கொண்டு, சொற்பொழிவாற்றச் செய்தும் மக்களுக்கு தமிழ் ஆர்வத்தை உண்டாக்குகிறது. மேலைச் சிவபுரி வள்ளுவர் மன்றமும் இப்பணியைத் தொடர்ந்து செய்து வருகிறது.

பண்டிதமணி, வ. சுப. மா. சோமலெ. போன்றவர்கள் இறுதி மூச்சுவரை ''தமிழ்'' ''தமிழ்'' என அதன் வளர்ச்சிக்காகவே பாடுபட்டார்கள். அவர்களைப் போல இன்றும் பல அறிஞர்கள் பாடுபட்டு வருகிறார்கள்.

அமரர் சுத்தானந்த பாரதியார் ''திருக்குறள், வாசுகி மணாளன் பெற்ற சிரஞ்சீவியான தங்கமணிக் குழந்தை'' என்கிறார். இதற்கு இணையான நூல் உலகில் வேறு மொழியில் இல்லை எனக் கூறியுள்ளார். வெளிநாட்டவர்கள் திருக்குறளை மொழி பெயர்த்துப் படிக்கிறார்கள். நம்மில் எத்தனை பேர் திருக்குறளைப் படிக்கிறோம்? சிந்தித்துப் பார்க்க வேண்டும்!

ஆந்திர மாநிலத்தில்கூட, எண்பது சதவீத நர்சரிப் பள்ளிகளில் தெலுங்குதான் பயிற்சி மொழியாக இருக்கிறது. தமிழகம் மட்டும்தான் இப்படி ஆங்கிலத்திற்கு அடிமையாகி இருக்கிறது. தாய்மொழி மூலம் கல்வி கற்றால்தான் இயற்கையான அறிவு பெருகி ஆக்க வழிச் சிந்தனை பெருகும். ஜப்பானின் பயிற்சி மொழி ஜப்பானிய மொழிதான். அதனால் அமெரிக்க நாட்டை விஞ்சி விழுங்கி ஏப்பம் விடும் அளவிற்கு

ஜப்பானின் விஞ்ஞானத் தொழில் நுட்பங்கள் ஓங்கி வளர்ந்து விட்டன.

1986 ஆம் ஆண்டு அமெரிக்காவில் ரேகன் கையெழுத்திட்டு, ஒருசட்டம் உருவாகியிருக்கிறது. அந்தச் சட்டத்தின்படி ஒவ்வோர் ஆண்டிலும் ஒரு மில்லியன் டாலர் (ஒரு கோடியே முப்பது லட்சம் ரூபாய்) செலவாகிறது. இந்தச் செலவு எதற்குத் தெரியுமா? ஜப்பானிய மொழியிலிருந்து, விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பச் செய்திகளை (ஆவணங்களை) ஆங்கிலத்திற்கு மொழி பெயர்க்க என ''இந்து'' பத்திரிகையில் ஷிரோ. யோனே யாமா எழுதிய கட்டுரையிலிருந்து தெரியவருகிறது.

''உங்கள் நாட்டில் கல்வி நிலை உயர வேண்டுமென்றால், அனைத்தையும் உங்கள் தாய் மொழியிலேயே' படிக்கவும், பேசவும், எழுதவும் கற்றுக் கொண்டு வாருங்கள். பிறகு பாருங்கள் முன்னேற்றத்தை'' என்கிறார். ஹெச் ஜீ. வெல்ஸ்.

ரவீந்தரநாத் தாகூர், தம் கடைசிக் குழந்தைக்கு, சிறு வயதிலேயே ஆங்கிலம் கற்றுத்தரும் படி, திருமதி மார்க்க ரெட் நோபலே, (பின்னாளில் சகோதரி நிவேதிதா) கேட்டுக்கொண்டார். அந்த அம்மையாரோ ''முதலில் தாய் மொழியான வங்காள மொழியைக் கற்றுக் கொடுங்கள். பிறகு சமஸ்கிருதம் கற்கட்டும். ஆங்கிலத்தைப்பற்றி அப்புறம் யோசிப்போம்'' என்றார்.

''தாய் மொழியைத் திறமையாகப் பயன்படுத்த அறியாத எவனும் பிற மொழியை திறமையாகப் பயன் படுத்தக் கற்றுக்கொள்வது கடினம்'' என்கிறார் பெர்னாட்ஷா.

தாய் மொழியில் போதித்தால்தான், மக்களின் முழுச் சக்தியும், நாட்டின் முன்னேற்றத்திற்குப் பயன்படும். தாய் மொழியில் படித்து, தொழிலில் பெரும் முன்னேற்றம் கண்ட ஜப்பானியர்கள், வணிகத் தொடர்புக்கு ஆங்கிலம் தேவையென உணர்ந்த பிறகு தான் ஆங்கிலம் கற்றுக் கொண்டார்கள்.

பிற மொழிகளை ஒதுக்குவதும், வெறுப்பதும் அறிவு வளர்ச்சிக்கு உகந்தது அன்று. எனவே தாய் மொழியில் நன்குபடியுங்கள். பின்னர் பிற மொழிகளையும் கற்றுக் கொள்ளுங்கள்.



மணிவண்ணன் மடல்..

10. பள்ளிகளில் ஆங்கில மோகம்

அன்புள்ள ஆச்சிக்கு,

உங்களை மறந்தே போனேன் என்று எண்ணியிருப்பீர்கள். வரதட்சிணையைப் பற்றி பல மடல்கள் அண்ணனுக்கே எழுதினேன்- பெரும்பாலும் சம்பாதிக்கும் கை என்பதால் எழுதியதோடு நிற்கவில்லை. செயலும் மேற்கொண்டிருக்கின்றேன்.

இந்தக் கடிதத்திலிருந்து உங்களுக்குத் தொடர்ந்து சில பிரச்சினைகளைப் பற்றி எழுதப் போகிறேன். என் மடல்களைத் தொடக்கத்திலிருந்து படிக்காதவர்கள், 'யார் இந்த மணிவண்ணன்' என்று கேட்பது என் காதில் விழுகிறது. ஆதலால் என்னை இது முதல் வெளிக்காட்டிக் கொள்கிறேன். மணிவிழாக் கொண்டாடியதால் இப்படிப் புனைப் பெயர் வைத்துக் கொண்டேன்.

பிள்ளைகளின் கல்வி பற்றி உங்களுடன் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ள நினைக்கிறேன். 'அப்பச்சி' என்றும் 'ஆத்தா' என்றும் நம் வீடுகளில் முன்பு கேட்ட மழலைக் குரல்கள், இப்பொழுது **'Daddy'** என்றும் **'Mummy'** என்றும் மாறிவிட்டன. பிள்ளைகள் டையும், ஷூவும், சாக்ஸூம் அணிந்து கொண்டிருப்பது அழகாய்த் தான் இருக்கிறது. ஆனால் பெரியவர்களே விட்டுவிட்ட டையையும் மேல் பொத்தான் மாட்டிக் காலரை இணைத்த சட்டையையும், பிஞ்சுக் கால்களை இறுக்கும் 'ஷூவையும்' பிள்ளை காலை 7 மணி முதல் பகல் 3 மணி வரை போட்டுக் கொண்டு சிரமப்

படத்தான் வேண்டுமா?

அந்தப் பிள்ளை நாள்தோறும் சுமக்கும் புத்தகப் பை! அடடா! நாலே ஆண்டுகளில் கூனல் விழுந்து விடும்! அந்தப் பையைத் திறந்து பார்த்தால், அவ்வளவும் ஆங்கிலத்தில்! தாய்ப்பாலை, வேண்டாம் என்று ஒதுக்கி வைத்த நாகரிகம் *தாய் மொழியையும்* ஒதுக்கி வைத்து விட்டது! அப்புறம் *தாய்* நாட்டுப் பற்று எப்படி உண்டாகும்?

கல்வி பற்றிய அறிவும் சிந்தனையும் பெற்றோர்களுக்கு இல்லை என்பதைச் சொல்ல வருத்தமாக இருக்கிறது. குழந்தை தாய்மொழியைத்தான் மிக வேகமாகக் கற்றுக் கொள்ளும். தாய் மொழியில் கல்வி இருந்தால்தான், குழந்தை முதல் இளைஞன் வரை, தான் படிப்பதைச் சிந்திக்க முடியும். சிந்திப்பதால் தான் அறிவு வளரும்.

வேறு மொழியில் கல்வி கற்றால், அந்த மொழியைக் கற்பதில் தொல்லை. அந்த மொழியில், பாடங்களைப் புரிந்து கொள்வதில் தொல்லை. அந்த மொழியில் சிந்திப்பது என்பது பெரும்பாலும் முடியாத செயல். நம் நாட்டில் M. A., வரை படித்தவர்கள் கூட, தமிழில் சிந்தித்துத் தான், ஆங்கிலத்தில் பேசுகிறார்கள்; எழுதுகிறார்கள்.

தாய் மொழியில் படிப்பதைப் புரிந்து கொள்ளவும், சிந்திக்கவும் முடிவதால், ஒரு ஆண்டில் வேறு மொழி வழியாகப் படிக்கும் பாடத்தை, தாய் மொழியில் அரை ஆண்டில் படித்து விடலாம். அது மட்டும் அல்ல. படித்ததெல்லாம் சொந்த அறிவாக மாறும். வேறு மொழியில் படித்தால், படித்ததை நினைவில் வைத்து, ஒப்பிக்கத் தான் முடியும். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலிருந்து, நம் மக்கள் ஆங்கில வழியாகவே அறிவியல், பொருளாதாரம். கணக்கு முதலிய பாடங்களைக் கற்றுக் கொள்வதால், நமது நாட்டில் படித்தவர்கள் பெருகியுள்ள அளவிற்கு 'அறிஞர்கள்' 'வித்தகர்கள்' (Experts) பெருக வில்லை.

அது மட்டும் இல்லை. ஆங்கில மொழியின் வழியாக, ஆங்கில நாகரிகமும் குடி புகுந்தது. நல்லவை எங்கே இருந்து வந்தாலும் ஏற்றுக் கொள்ளலாம். ஆனல் நம் பண்பாட்டுக்குப் பொருந்தாதவை எல்லாம், ஆங்கிலக் கல்வியால், நமது பழக்க வழக்கத்தில் புகுந்து விட்டன. படித்தவர்கள், பணக்காரர்களின் வாழ்க்கை முறையே மாறிவிட்டது. ஒழுக்கத்திலும் பெரியோர்களுக்குக் காட்டும் மரியாதையிலும், தாய் தந்தையரைப் பாதுகாப்பதிலும் பெருங்குறைகள் ஏற்பட்டுவிட்டன.

நாடு சுதந்திரம் பெற்றால், இந்த நிலை மாறிவிடும் என்று, சுதந்திரத்திற்காகப் போராடிய தலைவர்கள் எண்ணினர். பகவான் இராமகிருஷ்ணர், சுவாமி தயானந்தர், இராமலிங்க வள்ளலார், சுவாமி விவேகானந்தர் முதலிய சான்றோர்கள் இந்தியப் பண்பாட்டு மறுமலர்ச்சி உண்டாவதற்கு வழி காட்டினர்.

ஆனால், இன்று நடப்பது என்ன? ''மரத்தைப் பிடித்த பேய், வீட்டையே பிடித்துக் கொண்டதைப்'' போல, ஆங்கில வழிக் கல்வி, மழலை பேசும் வயசிலேயே தொடங்கப்படுகிறது. ஆங்கிலேயர் ஆட்சியின்போது கூட இந்தக் கொடுமை இல்லை. மெட்ரிகுலேஷன் தேர்விற்கு மட்டுமே, எல்லாப் பாடங்களையும் ஆங்கிலத்தில் கற்பித்தனர். எஸ். எஸ். எல். சி. தேர்வு முடிய எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும், எல்லாப் பாடங்களையும் தாய்மொழியில் கற்பித்தனர். ஆங்கிலம் கட்டாயப் பாடம்தான். ஆனால் அது ஒரு பாடம் மட்டுமே.

கணக்கு, வரலாறு, விஞ்ஞானம் முதலியவை எல்லாம் தமிழில்தான் கற்பித்தனர்.

ஆனால் இன்று? நர்சரிப் பள்ளியிலேயே ஆங்கிலம் போத -னை மொழியாக வைக்கப்பட் டிருக்கிறது.

பிள்ளை விளையாட்டாகப் பாடி மகிழ வேண்டிய பாடல்கூட நர்சரி ரைம் தான்! தமிழில் பாடலா இல்லை? கவிமணி தேசிக விநாயகரும், அழ. வள்ளியப்பா வும் பாரதியாரும் பாரதிதாசனும் எவ்வளவு அழகாகப் பாடி வைத் திருக்கிறார்கள்!

சின்னஞ்சிறு குழந்தைக்குக் கணக்கு ஆங்கிலத்தில் கற்பிக் கிறார்கள். ஐந்தாம் வகுப்புவரை, இப்படி ஆங்கிலத்தில் படித்த குழந்தையை, உயர்நிலைப் பள்ளி யில் ஆறாவது வகுப்பில் சேர்க்கும் போது சிக்கல் வருகிறது. பள்ளி யில் தமிழ் வழியாகக் கற்பிக்கும் பிரிவுகள் அதிகமாகவும், ஆங்கில வழியாகக் கற்பிக்கும் பிரிவு ஒன்றே ஒன்று மட்டும் இருப்ப தால், பெற்றோர் படும் இன்னல் களுக்கு அளவே இல்லை.

நர்சரிப் பள்ளிகளில் படிக்கும் பிள்ளைகள், பள்ளியில் ஆங்கிலத் தில்தான் பேச வேண்டும் என்ற, கட்டாயமான விதிமுறை வைத் திருக்கிறார்கள். அண்மையில் ஒரு நகைச்சுவைத் துணுக்குப் பார்த் தேன். ஒரு ஆசிரியை ஒரு பெற் றோரிடம் ''உங்கள் மகனைக் கண்டித்து வையுங்கள்'' என்கி றார். பெற்றோர் காரணம் கேட்க, 'அவன் வகுப்புப் பிள்ளைகளுடன் தமிழில் பேசுகிறான்'' என்று விடை வருகின்றது. சுதந்திரத் திருநாட்டில், தமிழகத்தில், தமி ழில் பேசுவது குற்றமாகி விட்டது!

அடுத்த மடலில் தொடர் கிறேன்.

அன்புள்ள
மணிவண்ணன்
(வளரும்)

நவராத்திரியும் மகர் நோன்பும்

நாச்சியாபுரத்தில் நகரத்தார் அம்மன் கோவிலில் நவராத்திரி விழா வழக்கம் போல் இந்த ஆண்டும் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. அருள்மிகு நாச்சியாரம்மன் ஒவ்வொரு நாளும் வெவ்வேறு அலங்காரங்களில் காட்சி அளித்து அருள் பாலித்தார். தினமும் இசைத் தொண்டர் 'காசிஸ்ரீ' திரு. மெ. ஆதினமிளகி செட்டியார் பக்திப் பாடல்களைப் பாடினார். சரசுவதி பூஜையன்று காலையில் நடைபெற்ற திருவிளக்குப் பூஜையில் 28 சுமங்கலிப் பெண்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மகர்நோன்பு அன்று நாச்சியாபுரம் மகர் நோன்புத் திடலில், மூன்று சுவாமிகளும் ஒன்று சேர்ந்து அம்பு போட்ட கண் கொள்ளாக் காட்சியை ஏராளமான மக்கள் கண்டு களித்தனர்.

மணி விழா

தேவகோட்டை முன்னாள் நகர் மன்றத்தலைவர் திரு. சுப்பிரமணியன் செட்டியாரின் தம்பி திரு. வள்ளியப்ப செட்டியாரின் 60ஆம் ஆண்டு நிறைவு மணி விழா 28-9-90 அன்று சிறப்பாக நடைபெற்றது. இவர்கள் இராமேஸ்வரத்திலிருந்து காசிக்கு இரண்டு முறை நடந்து சென்ற குழுவினர்க்கு நாமக்கல் அருகேயுள்ள தமது நல்லூர்ப் பண்ணையில் மாபெரும் வரவேற்பு வழங்கிய தைப்பாராட்டி காசிஸ்ரீக்கள் அனைவரும் திரு. அரு. சோ. தலைமையில் பாராட்டி வாழ்த்தினர். திரு. சோம. நாராயணன் செட்டியார் பொன்னாடை போர்த்தினர். காசிஸ்ரீ திரு. வயிரவன் நன்றி கூறினர்.



துலாவூர் விலக்குச் சாலையில் அமைக்கப் பெற்றுள்ள கட்டுமான வளைவு, பேருந்து நிழற் கூடத் திறப்பு விழாவில் திரு. ஏஎல். எஸ். அழகப்பன் - திருமதி அழ. சகுந்தலா ஆச்சி, திரு. இராம. ஏகப்பன் - திருமதி ஏ. தெய்வானை ஆச்சி, 'காசிஸ்ரீ' திரு. அரு. சோ. இவ்விழாவில் திரு. ஏஎல். எஸ். அழகப்பனுக்கும் திரு. இராம. ஏகப்பனுக்கும் 'திருவருட் செல்வர்' என்ற பட்டம் வழங்கப் பெற்றது.

''நகரத்தார்கள் இன்றைக்குக் கறவாப் பசுக்களாகக் கருதப்படுகின்றனர்''

முனைவர் ஆறு. அழகப்பன் கூறுகிறார்!

முனைவர் ஆறு. அழகப்பன் அவர்கள் ஆத்தங்குடியைச் சேர்ந்தவர். எம். ஏ. பட்டமும் நாட்டுப்புற இயலில் எம். லிட். பட்டமும் நாடகத் துறையில் முனைவர் பட்டமும் பெற்றவர். நல்ல பேச்சாளர், எழுத்தாளர், சிறந்த சிந்தனையாளர். இவரது நாடக ஆற்றலைப் போற்றும் வகையில் தமிழக அரசு இவருக்குக் 'கலைமாமணி' விருது வழங்கியுள்ளது. இவர் பல நூல்களை எழுதியுள்ளார். நகரத்தார் சமூகத்தை மையமாகக் கொண்டு இவர் எழுதிய ''கருவேப்பிலை'' நாடக நூல் ஒப்பற்ற நூலாகும். செட்டிநாட்டுத் தாலாட்டுக்களைத் தொகுத்து ''தாலாட்டுக்கள் ஐந்நூறு'' என்ற நூலை வெளியிட்டுள்ளார். ஆச்சிமார்கள் மனமாற்றமடையவேண்டும் என்பதற்காக இவர் ''அன்புள்ள ஆச்சிக்கு'' என்று எழுதியுள்ள கடித இலக்கியம் பாராட்டுக்குரியது. இவர் பல வெளிநாடுகளுக்கும் சென்று வந்திருக்கிறார்.



முனைவர் ஆறு. அழகப்பன்

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழியல் துறைத் தலைவராகப் பணியாற்றி வரும் - மொழி, சமூகம், சமயம், தொண்டு ஆகியவற்றில் முற்போக்கு எண்ணங்கள் கொண்ட முனைவர் ஆறு. அழகப்பன் அவர்களை நேர்முகம் கண்டு வெளியிடுவதில் ''நகரத்தார் குரல்'' பெருமை கொள்கிறது.

நேர்முகத்தைத் தொடருங்கள் :-

''அன்றைய நகரத்தார்களின் அரசியலைப் பற்றியும் இன்றைய நகரத்தார்களின் அரசியல் - அணுகு முறை பற்றியும் சொல்லுங்களேன் . . .?''

''தேசியப் போராட்டம் நடைபெற்றபொழுது எண்ணற்ற நகரத்தார்கள் தங்களை அப்போராட்டத்திற்கு ஆட்படுத்திக்கொண்டார்கள். தேவகோட்டைச் சிறை நிரம்பி வழிந்தது. அதுபோல் திருப்புமுனை மிக்க அரசியலில் அவர்கள் இன்றைக்கு ஈடுபடாவிட்டாலும் ஒவ்வொரு அரசியல் கட்சியின் வளர்ச்சிக்கும் நகரத்தார்கள் உறுதுணையாக இருந்திருக்கின்றார்கள். ஜஸ்டிஸ் கட்சியினுடைய வளர்ச்சிக்கு டாக்டர் இராஜா சர் முத்தையாச் செட்டியார் அவர்கள், காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சிக்கு சொ. முருகப்பா அவர்கள் சுதந்திராக் கட்சியின் வளர்ச்சிக்கு 'கம்பன் அடிப்பொடி' சா. கணேசன் அவர்கள் திராவிடக் கழகத்தின் தி. மு. கழகத்தின் வளர்ச்சிக்கு இராம. சுப்பை

யா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சிக்குக் கவியரசு கண்ணதாசன் அவர்கள் தமிழரசுக் கழகத்தின் வளர்ச்சிக்கு சின்ன அண்ணாமலை அவர்கள் ஆகியோர் உறுதுணையாக இருந்திருக்கின்றனர். இராஜா சர் முத்தையாச் செட்டியார் அவர்கள் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் மாநிலச் சட்ட சபையில் அமைச்சர், எம். எல். ஏ., எம். எல். சி., ஆகிய பதவிகளில் திறம்படப் பணியாற்றி இருக்கிறார்கள். ப. சிதம்பரம் அவர்கள் மத்திய அமைச்சரவையில் அமைச்சராகப் பணியாற்றி இந்திய அளவில் நற்புகழ் எய்தினார்கள். இப்படி எத்தனையோ சொல்லலாம். பல அரசியல் கட்சிகள் நகரத்தார்களை இன்றைக்குக் கறவைப் பசுக்களாகக் கருதுகின்ற காலமாகப் போய்விட்டது. அரசியல் பற்றற்றுப் போய்விட்ட காரணத்தினால்தான் தாங்கள் வாழும் மாவட்டத்திற்கு 'அரசர் அண்ணாமலை மாவட்டம்' என்றோ, 'வள்ளல் அழகப்பர் மாவட்டம்' என்றோ மாற்ற நினைக்கவில்லை. இன்றைக்குள்ள அரசியல் கட்சிகளில் நகரத்தார்கள் தீவிரப்பற்றுடையவர்களாக இருந்திருப்பார்களேயானால் நகரத்தார்கள் இப்பொழுது பிற்படுத்தப்பட்டோர் நலப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருப்பார்கள்.''

வெற்றி பெற்றுள்ள நகரத்தார்கள்

''பல துறைகளில் வெற்றிபெற்றிருக்கும் நகரத்தார்களைப் பற்றி .?''

''கலைத்துறையில் ஏவி. மெய்யப்பச் செட்டியாரும் பத்திரிகைத் துறையில் எஸ். ஏ. பி. அண்ணாமலையும் மருத்துவத் துறையில் டாக்டர் ஏ. எல். அண்ணாமலை போன்றவர்களும் கல்வித்துறையில் அரசர் அண்ணாமலை அவர்களும், வள்ளல் அழகப்பர் அவர்களும் தொழில் துறையில் எம். ஏ. சிதம்பரம் அவர்களும் கருமுத்து தியாக ராசச் செட்டியார் அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். கப்பலோட்டிய தமிழன் என்று வ. உ. சியைக் குறிப்பிடுவதுபோலக் கப்பல் விட்ட நகரத்தாராய் எல். அழகுசுந்தரம் செட்டியார் அவர்கள் திகழ்ந்தார்கள். கோவில்களில் சோலைகளை மட்டும் உண்டாக்கவில்லை. நாடுகளில் பல ஆலைகளையும் உண்டாக்கியவர்கள் நகரத்தார்கள். இலக்கிய, சமயத்துறையில் பண்டிதமணி, தமிழ்க்கடல் இராய. சொ., வ. சுப. மா. முதலியவர்களைக் குறிப்பிடலாம். இயல்பாகவே அறிவும் ஆற்றலும் நாகரிகமும் மிக்க இனமாக அமைந்துவிட்டதால் எத்துறைக்குச் சென்றாலும் நகரத்தார்கள் சோடை போனதில்லை. அத்துறைக்குச் சொத்தாக இருந்திருக்கின்றார்கள். வளமான பூமியை உருவாக்க உரத் தொழிற்சாலை உருவாக்கி முன்னோடியாக விளங்கி வரும் ஏ. சி. முத்தையா அவர்கள், இந்திய மண்ணில் அண்ணாந்து பார்க்கும் கட்டிடங்களுக்குச் சிமிண்டைத் தந்துதவிய செட்டி நாட்டுச் சிமிண்ட் ஆலை அதிபர் எம். ஏ. எம். இராமசாமி அவர்களும் இத்துறையில் கொடிகட்டிப் பறப்பவர்களேயாவர். எனவே அனைத்துத் துறைகளும் நகரத்தார்களுக்கு அத்துபடி என்றே சொல்லலாம்.''

உள்ளத்தைத் தொட்டவர்கள்

''நகரத்தார்களில் புகழ்பூத்த பெரியவர்களில் உங்கள் உள்ளத்தைத் தொட்டவர்கள் யார்? யார்?''

''பத்திரிகைத் துறையில் கொடிகட்டிப் பறந்த தமிழ்வாணனிடம், ஒருவர் அவரது முகவரியை வினவ ''அஞ்சலட்டையில் கருப்புக் கண்ணாடி படம் ஒன்று போட்டு சென்னை'' என்று போட்டால் அவ்வஞ்சலட்டைத் தன்னிடம் வந்து விடும் என்று தேவகோட்டையைச் சேர்ந்த தமிழ்வாணன் செம்மாந்து பேசினார். அதுபோல் அரசர் அண்ணாமலையார் காலத்தில் வாழ்ந்த சின்ன அண்ணாமலையும் திருவண்ணாமலைக்குச் சமமாகப் புகழின் உச்சியில் வாழ்ந்தார். தன்னுடைய உணர்வுகளையே தத்துவமாகப் பாடுகின்றார் என்று ஒவ்வொருவரும் நினைக்கத்தக்க வகையில் கவிதைகளை எழுதிக் குவித்த கண்ணதாசன், பகைவனுக்கும் பாற்சோறு ஊட்டிய செட்டி நாட்டுப் பண்புசால் அரசர் முத்தையவேள் - இப்படி எண்ணற்ற பலர் இருந்தாலும் பிறந்த இடத்திற்கும் வாழும் இடத்திற்கும் பெருமை சேர்க்கும் எந்த நகரத்தாரும் நாம் வணங்கிப் போற்றுதற்குரியவர்களே.''

படித்தவர்களுக்கு உள்ள மதிப்பு

''நகரத்தார்களில் படித்த தமிழறிஞர்களுக்கு இன்றைய தமிழகத்தில் உள்ள மதிப்பீடு என்ன?''

''அரசர் அண்ணாமலை அவர்கள் பண்டிதமணி அவர்கள் வீட்டிற்குச் சென்று உரையாடி மகிழ்வார் என்று அறிகிறோம். அதேபோல் டாக்டர் வ. சுப. மா. அவர்களின் காரைக்குடி இல்லத்திற்கு அரசர் முத்தையவேள் அவர்கள் சென்று உரையாடி மகிழ்வார் என்றும் அறிகிறோம். தமிழ்க்கடல் இராய. சொ. அவர்களுக்குக் காரைக்குடியில் நகரத்தார்கள் செய்த பெருமை ஊரறியும். பாடுவார் முத்தப்பச் செட்டியார், தமிழ்த்தென்றல் திரு. வி. க., நா. மு. வேங்கடசாமி நாட்டார், பம்மல் சம்பந்த முதலியார், ஆறுமுக நாவலர் முதலியவர்களுக்கு ஒப்பான நகரத்தார் அறிஞர்கள் இப்போதும் உள்ளனர். பிற இனத்தவர்கள் அவர்களுக்குத் தரக்கூடிய மரியாதை மெச்சத்தகுந்ததாகவே இருந்து வருகிறது. புலவர்களைப் போற்றும் சங்க இலக்கியப் பெருமை இனி நகரத்தார் அறிஞர்களுக்குக் கிட்டாத ஒன்றாகவே இருந்து வருகின்றது. அரசு, கவியரசு கண்ணதாசனை ஆஸ்தானக் கவிஞராக்கியது. படித்த, திறமையுள்ள பலருக்கு திரு. வி. க., கலைமாமணி போன்ற விருதுகளை வழங்கியது. இத்தகைய நலம் பாராட்டல் நகரத்தார் சமூகத்தினரிடம் ஒரு காலத்தில் ஓங்கி இருந்தது. இப்பொழுது மங்கி வருகின்றது.''

வேலையில்லாத் திண்டாட்டம்

''நகரத்தார்களின் மத்தியில் உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை எவ்வாறு போக்கலாம்?''


''முதற்கட்டமாகச் செட்டி நாட்டுப் பகுதியில் உள்ள படித்து வேலையில்லாத இருபாலர் பட்டியல்களையும் தொகுக்க வேண்டும். அடுத்துப் படிப்புக் குறைந்து ஆனால் பல பணிகளுக்குப் பயன்படத்தக்க இருபாலர் பட்டியல்களையும் தொகுக்க வேண்டும். இதேபோல் செட்டி நாட்டுப் பகுதியைத் தாண்டி வாழ்வோர் பட்டியல்களையும் தொகுக்க வேண்டும். இப்புள்ளி விவரத்தை எண்ணற்ற தொழிற்சாலைகளையும் நிறுவனங்களையும் நடத்தும் நகரத்தார் தொழிலதிபர்களுக்கு அனுப்ப வேண்டும். அவர்களும் மனமுவந்து தங்களுடைய பணிகளுக்குப் பொருத்தமான நம்மவர்களை நியமித்தால் ஓரளவு வேலையில்லாத் திண்டாட்டம் தீரும். இதனால் எதிர்பாராத திருப்பம் கூட ஏற்படும்.''

வரதட்சணைக்குத் தீர்வு காண வழி

''நம் சமூகத் திருமணங்களில் தலைவிரித்தாடும் வரதட்சணை யையும் முறைதலைகளையும் எவ்வாறு போக்கலாம்?''

''வரதட்சணையால், வளரா, அசையாப் பொருள்கள் சொந்த வீடுகளையும் வாடகை வீடுகளையும், லாக்கர்களையும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. இக் கொலுக் காட்சியை நிறுத்திவிட்டு நாகர் கோவில் பகுதிகளில் தோட்டம், துறவு, வீடு என்று மாப்பிள்ளைக்குக் கொடுப்பது போலக் கொடுக்க முன்வரலாம். முறைதலைகளில் நகைப் புக்கு இடமான முறைதலைகளை முதலில் ஒழிக்கலாம். உதாரண மாகப் பழங்காலத்தில் பெண்ணுக்கு மாப்பிள்ளை தாலி கட்டாமல் மாப்பிள்ளைக்குப் பதிலாக பெரியவர் தாலி கட்டி வந்தார். இதற்கு முறைதலையில் மாப்பிள்ளைக்குத் தாலி கட்டியதற்கு ரூ. 51, ரூ. 101 என்று கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது. இப்பொழுது மாப்பிள்ளைகளே தாலிகட்டி வருகின்றார்கள். ஆனால் இன்றும் முறைதலைச் சிட்டை யில் 'மாப்பிள்ளைக்குத் தாலிகட்டியதற்கு' என்று இருந்து வருகின் றது. இது சரியா? மேலும் ஐந்து பைசா பத்து பைசாவுக்கு முறுக்கு வாங்கித் தின்னும் இவ்வுலகில் மாப்பிள்ளைப் பலகாரம் என்ற பெயரில் முனை முறியாத முறுக்கு 300. 500, 1000 என்று கொடுக்கின் றோமே. இதுவும் சரியா? நகரத்தார்களுக்கு மத்தியில் எத்தனையோ முறைகள்! இவைகள் தொடர்பாக மாநாடுகளும் கருத்தரங்குகளும் நடைபெற்று விட்டன. திருமண வேளைகளில் நகரத்தார் சீர்திருத்த இளைஞர்களும் வருமானவரிக்காரர்களும் குழப்பம் ஏற்படுத்தும் முன் நாம் மனமாற்றம் கொள்வதுதான் வருமுன் காக்கும் வாழ்வியல் ஆகும்.''

(அடுத்த இதழில் முடியும்)



செய்திகள் வாசிப்பவர்...

எல். சுந்தரம்

ஃ ஆத்தங்குடி நகரச் சிவன் கோவிலில் 20-9-90 முதல் 29-9 90 முடிய நவராத்திரி விழாச் சிறப்பாக நடைபெற்றது. கருமாரி அம்மன், லெட்சுமி, திருக்கல்யாணம் ஆகிய அலங்காரங்களும் விஜயதசமியன்று சுவாமி பாரி வேட்டைக்குச் செல்லும் காட்சியும் சிறப்பாக இருந்தன.

ஃ அறந்தாங்கி அருகே உள்ள வல்லவாரி திருமுண்டார் ஆலயக் குட நீராட்டு விழா 25-6-90 அன்று நடைபெற்றபோது புலவர் மாமணி திரு. மா. முத்துராமனும் திருமதி சி. எஸ். விசாலாட்சியும் நேர்முக வர்ணனை செய்தார்கள்.

ஃ தேவகோட்டை கந்தர் சஷ்டி விழாக் கழகத்தின் 45 ஆம் ஆண்டு விழா 18-10-90 முதல் 26-10-90 வரை சிறப்பாக நடைபெற்றது.

ஃ காரைக்குடி கந்தர் சஷ்டியின் 5 ஆம் ஆண்டு விழா 19-10-90 முதல் 23-10-90 வரை ஐந்து நாட்கள் கொப்புடையம்மன் கோவிலில் சிறப்பாக நடைபெற்றது.

ஃ பாகனேரி திரு. கரு. மா. ரவீந்திரன் B Com தமிழ்நாடு மாணவர் காங்கிரஸ் கட்சியின் செயற்குழு உறுப்பினராக இருந்து தொண்டாற்றி வருகிறார்.

ஃ ராணி லேடி மெய்யம்மை ஆச்சி அவர்களின் 86 ஆவது பிறந்த தினவிழா சென்னை ராணி சீதை மன்றத்தில் 11-10-90 அன்று சிறப்பாக நடைபெற்றது.

ஃ தஞ்சை மாவட்டம் திருக்கொள்ளம்பூதூர் அருள்மிகு வில்வாரண்யேஸ்வரர் திருக்கோயிலில் தீர்த்தத் திருவிழா 17-10-90 அன்றும் ஓடத் திருவிழா 18-10-90 அன்றும் நடைபெற்றன.

ஃ எந்த நேரத்திலும் எந்தத் தலைப்பிலும் மணிக் கணக்கில் சொற்பொழிவு நிகழ்த்தக்கூடிய பேராசிரியர்களில் முனைவர் சுப. அண்ணாமலை அவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள்.

ஃ பெங்களூர் கர்நாடக நகரத்தார் சங்கம் சார்பாக பெங்களூர் உட்லண்ட்ஸ் ஓட்டலில் 11-11-90 அன்று சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி திரு. ஏஆர். லெட்சுமணன், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் பொது மேலாளர் திரு. வீர. வீரப்பன் ஆகியோருக்குப் பாராட்டு விழா நடைபெற உள்ளது.

பக்தி நெறி மன்றத்தின் சிறப்புக் கூட்டம்!

மதுரை நகரத்தார் பக்திநெறி மன்றத்தின் சார்பாக 10–11–90 சனிக்கிழமையன்று மாலை 5 மணி அளவில் மதுரை நகர விடுதியில் சிறப்புக் கூட்டம் நடைபெற உள்ளது. அதுசமயம் குற்றாலம் பராசக்தி கல்லூரியின் பேராசிரியை முனைவர் இராம. சௌந்தர வல்லி அவர்கள் ''ஆச்சிமார் பார்வையில் ஆண்டவன்'' என்ற தலைப்பில் உரையாற்றவிருக்கிறார்கள்.

ஒற்றுமை வேண்டும்

ஐந்து விரல்களைச் சேர்த்தால் தான் எந்தக் காரியத்தையும் செய்ய முடிகிறது. 'ஐந்து' வாழ்க்கையில் முக்கியமான ஒன்று என்று தான் தோன்றுகிறது. பஞ்சபூதங்கள், ஐம்பொறி.... என அண்டமும், நம் உடலுமே ஐந்தில் தான் அடக்கம். ஐம்பொன் சிலையைத் தானே தெய்வமாக வழிபடுகிறோம். ஏன். மகாபாரதத்திலே ஐவர்தானே, வெல்கிறார்கள்.

இதெல்லாம் எதற்குத் திடீரென்று என்கிறீர்களா? இவை எல்லாவற்றிற்கும் பின்னால் ஒற்றுமையைப் பார்ப்பீர்கள்! என்னது? ஆமாம். ஒற்றுமையைத் தான். இந்த ,ஐந்திலே எது ஒன்றும் இன்னொன்றைப் பிரியும் போது முழுமை அடைவதில்லை. ஒன்றை ஒன்று சார்ந்திருக்கும் போது, வளர்ச்சி அடைகிறது. வழி பிறக்கிறது.

ஒரு முறை ஒரு கல்லூரி முதல்வர் ரொம்ப அழகாகச் சொன்னார். ''இப்போதெல்லாம் யாருமே சார்ந்திருக்க வேண்டுமென்று ஆசைப்படறதில்லை. அதனால்த் தான் குடும்பங்களில் பிரச்னை எழுகிறது'' என்று.

இதையே வைத்துக் கொண்டு பாருங்கள். உங்கள் குடும்பத்தின் பிரச்னைக்கெல்லாம் ஆணிவேர் எங்கிருக்கிறது என்று தெரியும். 'தனித்துவம்' தேவைதான். ஆனால் எதை விட்டு எது விலக முடியும்?

பஞ்ச பூதங்களும் இணைந்து உதவி செய்தால்த் தான் ஒரு அழகிய குருத்து வளர்ந்து மலரும். காற்று நான் தான் பலம் வாய்ந்தவன் என்று ஓங்கினால்.. மண்ணிலே விழுந்துவிடும் அந்தச் சின்ன மலர்.

ஆதாரம்: மங்கையர் மலர்

— மேலைச்சிவபுரி முத்துராமன்
திருச்சூர்

'அடி'யும் அண்ணன் தம்பியும்!

''அடி' உதவுகிற மாதிரி அண்ணன் தம்பி உதவமாட்டார்கள்'' என்பது நாட்டில் அன்றாடம் கூறப்படும் பழமொழியாகும். 'அடி' என்பதை அடிப்பது - உதைப்பது எனப் பொருளாகக் கொள்கிறார்கள். அது சரியல்ல. 'அடி' என்றால் இறைவனின் திருவடிகள் எனப் பொருளாகும். இறைவன் திருவடிகள் நமக்கு உதவி அருளுவது போல் அண்ணன் தம்பி யாருமே உதவ முடியாது என்பதுவே இதன் பொருளாகும்.

— புலவர் மாமணி
மா. முத்துராமன்

(திருவாடானையில் 26-9-90 அன்று நடைபெற்ற வழக்காடு மன்றத்தில்)

மணி விழா

தேவகோட்டை அள. சித. ராம. அரு. ராம. ராம. இராமநாதன் செட்டியார் - உமையாள் ஆச்சியின் 60ஆம் ஆண்டு நிறைவு மணி விழா 29-9-90 அன்று பிள்ளையார்பட்டியில் சிறப்பாக நடைபெற்றது. மணி விழாவினை ஒட்டி 'மங்கலப்பொருள்' என்னும் தலைப்பில் சேது. அரு. ஸ்ரீ தேவி தலைமையில் பாலர் கவியரங்கம் நடைபெற்றது. மேற்படி கவியரங்கத்தை தேவகோட்டை உ. மு. சுப. லெ. அழ. அழகப்ப செட்டியாரவர்கள் துவக்கி வைத்தார்கள். புலவர்மாமணி திரு. மா. முத்துராமன் ஆசி கூறி பரிசுகள் வழங்கினர்.

கண்ணாடியில் ஓவியம்

தாளில் ஓவியம் வரையலாம்; துணியில் ஓவியம் வரையலாம்; சுவற்றில் ஓவியம் வரையலாம். படத்தில் காணும் அழகுமிக்க இந்த கண்ணன் - ராதை ஓவியம் கண்ணாடியில் வரையப்பட்டதாகும். இதை வரைந்தவர் கண்டனூர் திரு. எஸ்வி. ஆர்எம். ஆவுடையப்பன் ஆவார். 43 வயதுடைய இவர் கண்ணாடி ஓவியத்தைப் பற்றி என்ன கூறுகிருர்?

''Glass Painting என்று சொல்லக்கூடிய இக்கலை 300 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். பழைய படங்கள் விலைக்கு வந்த போது அதன் மதிப்பை உணர்ந்து நான் இக்கலையைப் பயின்றேன். இந்தக் கலையில் அரசுத் தேர்வு



எழுதி கீழ்நிலையில் தேர்ச்சி பெற்றுள்ளேன். Oil paint, Chemical இரண்டையும் கொண்டு ஓவியங்களைத் தீட்டி வருகிறேன். ஒரு ஓவியம் தீட்ட ஒரு மாதம் ஆகும். அளவைப் பொறுத்தும் வேலை நுணுக்கங்களைப் பொறுத்தும் இதனுடைய விலை மதிக்கப் பெறுகிறது.

''திருச்சியில் அரிமா சங்க மாநாடு ஏப்ரல்'89ல் நடைபெற்ற



திரு. ஆவுடையப்பன்

போது நான் வரைந்த இது போன்ற கண்ணாடி ஓவியங்கள் பதினென்று காட்சிக்கு வைக்கப் பெற்றிருந்தன. பூம்புகார் கைவினை கலைப் பொருள் கூடம் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு நான் இந்த வகையான ஓவியங்களை வரைந்து கொடுத்து வருகிறேன். கலை ஆர்வமிக்கவர்கள் இதை ஆர்வத்துடன் வாங்குகின்றனர்.''

சந்திப்பு: எல். சுந்தரம்

உயிரும் சம்பளமும்!

இந்தக் காலத்துப் பெண் எப்படி இருக்கிருள் தெரியுமா?

''அத்தான் உங்களுக்கு நான் என் உயிரைத் தருகிறேன்; உள்ளத்தைத் தருகிறேன். நீங்கள் வேறு ஒன்றையும் தரவேண்டாம். உங்கள் சம்பளத்தை மட்டும் தாருங்கள்'' என்று கூறும் வகையில் இருக்கிருள்.

— பேராசிரியர் சுப. கதிரேசன்
(பட்டினத்தடிகள் திருவிழாவில்)

நல்லாசிரியர் பழநியப்பன்

இவ்வாண்டு தமிழக அரசின் நல்லாசிரியர் விருது பெற்ற 228 பேரில் நால்வர் நகரத்தார். அந்த நால்வரில் படத்தில் காணும் திரு. எஸ். பழநியப்பனும் ஒருவர். அலவாக்கோட்டையைச் சேர்ந்த இவர் இப்போது ஆவினிப்பட்டி விவேகானந்தா கல்விக் கழகத்தில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி வருகிருர். இக்கல்விக்



கழகத்தில் 32 ஆண்டுகள் பணி புரிந்துள்ள இவர் 31-5-91ல் ஆசிரியர் பணியிலிருந்து ஒய்வு பெற உள்ளார். 2–6–1958ல் சேர்ந்த இவர் இக்கல்விக் கழகம் வளர, அரும்பாடுபட்டிருக்கிருர். தமிழக அரசின் நல்லாசிரியர் விருதையும் ரொக்கப் பரிசு ரூபாய் ஆயிரத்தையும் பெற்றுள்ள இவ–ரைப் பாராட்டுகிருேம்.

திருமணம்

மேலைச்சிவபுரி திரு. ஆ. ராம. பழநியப்ப செட்டியார் புதல்வியும் வழக்கறிஞர் திரு. பழ. இராமசாமியின் சகோதரியுமான செல்வி முத்தாத்தாள் என்கிற மீனாட்சி D.E.C.E. க்கும் மேற்படியூர் திரு. கரு. ஆண்டியப்ப செட்டியார் புதல்வனும் சேலம் கிருபானந்த வாரியார் பொறியியல் கல்லூரி விரிவுரையாளருமான செல்வன் இளங்கோ என்கிற நாகப்பன் B. E. க்கும் 26-8-90 அன்று மேலைச்சிவபுரியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

திருமணத்தையொட்டி கலைமகள் திரு. இராம. நடராஜன் செட்டியார் அவர்கள் தலைமையில் வாழ்த்தரங்கம் நடைபெற்றது. வழக்கறிஞர் திரு. பிஎம். கதிரேசன் தொழிலதிபர் திரு. நடராஜ் அண்ணாமலை, ஸ்பிக் திரு. மகாதேவன், இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழின் தலைமைச் செய்தியாளர் திரு. ஆர்எம். டி. சம்பந்தம் ''கல்கண்டு'' இதழின் ஆசிரியர் திரு. லேனா தமிழ்வாணன் மற்றும் பலர் வாழ்த்துரை வழங்கினர்.

நமது இதழின் ஆசிரியர் திரு வி. என். சிதம்பரம் செட்டியார் திரைப்படத் தயாரிப்பாளர் திரு. பழ. கருப்பையா, மற்றும் வழக்கறிஞர்கள், தொழிலதிபர்கள் நேரில் வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர். திரு. பழ. இராமசாமி நன்றி கூறினர்.

நல்லாசிரியருக்குப் பாராட்டு விழா

பள்ளித் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற பிள்ளைகளுக்குப் பரிசளிப்பும், மாநில நல்லாசிரியர் விருது பெற்ற கோட்டையூர் பள்ளித் தலைமை ஆசிரியை வள்ளியம்மைக்குப் பாராட்டு விழாவும் பள்ளத்தூர் மங்கையர்க்கரசி மன்றத்தின் சார்பில் 26-9-90 அன்று சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் தலைமை தாங்கினர். உமையாள் ஆச்சி வரவேற்ருர். தலைமை ஆசிரியைக்கு மீனா அருணசலம் பொன்னடை போர்த்திப் பாராட்டினர். பேராசிரியர் திரு. கரு. முத்தையா சிறப்புரை நிகழ்த்தினர்.

மணியே, மன்னிப்பாயே !

பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்களின் மணி விழா சிதம்பரத்தில் சிறப்பாக நடைபெற்ற நேரம். அந்த மணி விழாவில் கலந்து கொள்ள நம் நகரத்தார் இனத்தைச் சேர்ந்த ஒரு புலவர் மிகவும் விரும்பினர். சிதம்பரம் சென்றுவர பயணச் செலவுக்கு அவரிடம் பணமில்லை; கார் வைத்திருக்கும் செல்வந்தர்களுக்கு அவரைக் காரில் கூட்டிச்செல்ல மனமில்லை. நடந்தே சென்று மணி விழாவைக் கண்டு வரலாம் என்று அவரது உள்ளம் விழைந்தாலும், வயதான காரணத்தால் நடக்கக் கால்களுக்கு வலிமையில்லை. எனவே மணி விழாவிற்கு, தான் வர இயலாத காரணத்தை அப்புலவர் எளிய தமிழில் பின்வரும் பாடலாக எழுதி பண்டிதமணிக்கு அனுப்பி வைத்தார். ‘‘வஞ்சமில்லை; வருத்தமில்லை; வருவதற்கு ஆசை கொஞ்சமில்லை — மேகவாகன முடையார்க்கு என்னையங்கே கூட்டிச் செல்லும் நெஞ்சமில்லை; கால் நடக்க முடியவில்லை. மணியே என்னை மன்னிப்பாயே’’

(மேகத்தைக் ‘கார்’ என்றும் சொல்வதுண்டு; மேகவாகன முடையார் என்பதற்கு கார்வைத்திருக்கும் செல்வந்தர்கள் என்று பொருள்)

மேற்கண்டபாடலை பண்டிதமணி அவர்கள் மிகவும் ரசித்தார் களாம்.

— அள. சித. சொ. தெ. சொக்கலிங்கம்
காரைக்குடி

திருச்சியில் நீதிபதிக்குப் பாராட்டு விழா

சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி திரு. ஏஆர். லெட்சுமண னுக்கு 6-10-90 அன்று திருச்சி நகரத்தார் சங்கத்தின் சார்பில் பாராட்டு விழா நடைபெற்றது. தலைவர் திரு. எஸ்பி. அருணா சலம் வரவேற்றுப் பேசினார்.

அரிமா மாவட்ட முன்னாள் ஆளுநர் திரு எஸ்பி காசிச் செட்டி யார் திரு. எம். செல்லப்பன் திரு. ஆர்எம். ராமநாதன் செல்வி என். வைரம் திரு. ஏவி. கே. ஆவிச்சி செட்டியார் திரு. எஸ். ஏஆர். பழநியப்ப செட்டியார் திரு. எஸ். அண்ணாமலை திரு. எல். என். லெட்சுமணன் ஆகியோர் பாராட்டிப் பேசினர்கள்.

நீதிபதி தமது ஏற்புரையில் தமது முன்னேற்றத்திற்குக் கார ணம் கடின உழைப்பு, குடும்பத் தினர் செய்து வரும் அறப்பணி, குடும்ப அமைதி ஆகியவையே என்று குறிப்பிட்டார்.

விழாவிற்கு திருச்சி மாவட்ட நீதிபதி திரு. சித்திக், மாவட்ட கூடுதல் நீதிபதி திரு. கிருஷ்ணன், திரு. முத்துசாமி, துணை நீதிபதி திரு. திருநாவுக்கரசு, மாவட்ட மாஜிஸ்ட்ரேட் திரு. இளங்கோ ஆகியோரும், நீதித்துறையைச் சேர்ந்த பலரும், நகரத்தார் பெரு மக்களும் ஆச்சிமார்களும் வந்திருந் தனர்.

செயலாளர் திரு. ஏ. பழநியப் பன் நன்றி கூறினர்.

3 நாட்கள் :- 13-12-90 To 15-12-90; 22-12-90 To 24-12-90; 1-1-91 To 3-1-91

மதுரை-திருமூர்த்தி மலை-குருவாயூர்-சோத்தாணிக்கரை-எரிமேலி-பம்பை-சன்னிதானம்-செங்கோட்டை-மதுரை.

பஸ் கட்டணம், சாப்பாடு உள்பட ரூ. 240/-

3 நாட்கள் :- 16-12-90 To 18-12-90

மதுரை-பாபநாசம் - அகஸ்தியர் அருவி - ஆரியங்காவு - குளத்துப் புழை - பந்தளம் - ஆரண்முலா - எரிமேலி - பம்பை - சன்னிதானம் - செங்கோட்டை - மதுரை.

பஸ் கட்டணம், சாப்பாடு உள்பட ரூ. 240/-

ஸ்ரீ மூகாம்பிகை, குருவாயூரப்பன், சபரிமலை ஐயப்பன்

6 நாட்கள் :- 22-12-90 முதல் 27-12-90

மதுரை - பன்னாரி - மைசூர் - சுப்ரமண்யா - தர்மஸ்தலா - கட்டீல் - உடுப்பி - ஸ்ரீ மூகாம்பிகை - குருவாயூர் - எரிமேலி - பம்பை - சன்னிதானம் - ஆரியங்காவு - செங்கோட்டை - மதுரை.
பஸ் கட்டணம், தங்கும் செலவு, சாப்பாடு உள்பட நபர் 1க்கு ரூ. 460/-

---

பெருவழிப் பயணம்

4 நாட்கள் :- 1-1-91 To 4-1-91; 5-1-91 To 8-1-91; 9-1-91 To 12-1-91

மதுரை - குற்றாலம் - ஆரியங்காவு - குளத்துப்புழை - எருமேலி - பெரிய பாதையில் நடை துவங்கி கரிவலம்தோடு-பம்பை-சன்னிதானம்-செங்கோட்டை-மதுரை.

நபர் 1க்கு பஸ் கட்டணம், சாப்பாடு உள்பட ரூ. 310/-

5 நாட்கள் : 4-1-91 முதல் 8-1-91

மதுரை-திருமூர்த்திமலை-குருவாயூர்-திருப்பரையாறு-கொடுங்களூர்-காலடி - சோத்தாணிக்கரை - வைக்கம் - கடுத்திருத்தி - ஏத்துமானூர் - எரிமேலி - பெரிய பாதையில் நடை துவங்கி - கரிவலம்தோடு-பம்பை - சன்னிதானம்-ஆரியங்காவு-செங்கோட்டை-மதுரை.

பஸ் கட்டணம், சாப்பாடு உள்பட நபர் 1க்கு ரூ. 380/-

மகரஜோதி, பெருவழிப் பயணம்.

6 நாட்கள் : 11-1-91 முதல் 16-1-91 வரை

மதுரை-பழநி-குருவாயூர்- திருப்பரையாறு-கொடுங்களூர்-காலடி-சோத்தாணிக்கரை-வைக்கம்-ஏத்துமானூர்-எரிமேலி-பெரிய பாதையில் நடை துவங்கி - கரிவலம்தோடு - பம்பை (ஜோதி பார்த்தல்)-சன்னிதானம்-செங்கோட்டை-மதுரை.

நாள் 6க்கு பஸ் கட்டணம், சாப்பாடு உள்பட நபர் 1க்கு ரூ. 460/-
இருமுடிச் செலவு ரூ. 50/- தனி

அட்வான்ஸ் ரூ. 75 வீதம் செலுத்தி விரைவில் டிக்கட் பதிவு செய்ய வேண்டுகிறோம்.

உங்கள் குரல்

''நகரத்தார் குரல்'' அக்' 90 இதழில் ''மயக்கமா, தயக்கமா?'' என்ற தலைப்பில் திரு. இராம. சுப்பையா எழுதியுள்ள கட்டுரையில் மாப்பிள்ளை வீட்டாரின் பேய்ப் பசி அடங்க ஒரு முடிவு கட்ட வேண்டுமென்றும் மயங்காமல் தயங்காமல் துணிவுள்ள ஒரு சிலர் முன் வந்தால் நம் சமூகத்தின் மீதுள்ள பழி நீங்குமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

என் தந்தையார் திரு. அரு. பெரியண்ணன் தாயார் திருமதி பெரி. மீனாட்சி ஆச்சி இருவரும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே மயங்காமல் தயங்காமல் என் தம்பி பெரி. அழகப்பன் திருமணத்தையும் ஓராண்டு முன்பு இன்னொரு தம்பி பெரி. ரவியின் திருமணத்தையும் அதுபோல் நடத்திக் காண்பித்தார்கள். அதைப் பின்பற்றி நம் சமூகத்தவர் அனைவரும் திருமணங்களை நடத்தினால் நம் சமூகத்தின் மீதுள்ள பழி முற்றிலுமாக நீங்கும்.

டாக்டர் மு. பொன்னி
சென்னை

''நகரத்தார் குரல்'' அக்' 90 இதழ் புதுப் பொலிவோடும் அதிகப் பக்கங்களோடும் ஏராளமான செய்திகளோடும் வெளிவந்திருப்பது கண்டு மகிழ்ச்சி. ஆசிரியருக்கு எங்களின் பாராட்டுக்கள்.

ஆத்தங்குடி
ராம. நாச்சியப்பன்
நாகபட்டினம்

திரைப்படத் தயாரிப்பாளர் திரு. பழ. கருப்பையாவின் துணைவியார் திருமதி கமலம் ஆச்சி பட்டுச் சேலை அணியாது பண்பாடோடு இருப்பது நம்மினத்தின் கின்னஸ் சாதனையாகும் அவரை, நம்மினப் பெண்கள் பின்பற்றாவிட்டாலும் அவரது செயலைப் பாராட்டவாவது முன்வர வேண்டும்.

'ப்ளோரா' பழனிக்குமார்
கண்டவராயன்பட்டி

காவிரிப்பூம்பட்டினத்துச் செய்திகளை அழகாகத் தொகுத்து வெளியிட்டுள்ள குரலுக்கு எனது பாராட்டுக்கள்.

ஆர்எம். நாராயணன்
சென்னை.

பேட்டிக் கட்டுரைகளை வெளியிடுவதில் ''நகரத்தார் குர'' லின் பாணியே தனி. செல்வி மாலதி இராமநாதனின் பேட்டியும் கும. தமிழரசனின் பேட்டியும் சிறப்பாக இருந்தன. கல்விக்கும் திருமணத்திற்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்திருப்பதற்கு அக்' 90 குரலே சான்று.

ஏவி. இராமநாதன்
திருச்சி.

''குரல்'' தீபாவளிச் சிறப்பிதழைக் காணாது தவித்தோம். வந்தது. பிரித்தோம். படித்தோம் படித்தோம். பேரின்பமடைந்தோம். ''குரல்'' ஆசிரியருக்கு எம் பாராட்டுக்கள்.

எம். சரோஜா
ஆர். தமயந்தி
சேலம்.

கூட்டுறவு வங்கியின் தலைவர் தேர்வு

காளையார் கோவில் கூட்டுறவு நில வள வங்கிக்கு காளையார் கோவிலில் 30-8-90 அன்று இயக்குநர்கள் தேர்வு நடைபெற்றது. அதன்பின் 30-9-90 அன்று நடைபெற்ற தலைவர் தேர்தலில் பாகனேரி வே. வேலாயுதம் செட்டியார் அவர்கள் போட்டியின்றித் தலைவராகத் தேர்வு செய்யப்பெற்று 10-10-90 அன்று பதவி ஏற்றார்கள்.

நல்லாசிரியர் விருது பெற்ற ஆச்சி

இவ்வாண்டு தமிழக அரசின் நல்லாசிரியர் விருது பெற்ற 228 பேரில்-நால்வர் நகரத்தார் பெருமககள். அந்த நால்வரில் படத்தில் காணும் திருமதி வள்ளியம்மை ஆச்சியும் ஒருவர். இவர் இப்போது கோட்டையூர் சிதம்பரம் செட்டியார் மேனிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியையாகப் பணியாற்றி வருகிறார்.

திருமதி வள்ளியம்மை ஆச்சி கொத்தமங்கலத்தில் பிறந்தவர். புதுவயலில் வாழ்க்கை பெற்றவர். இவரது கணவர் திரு. ஏஆர். நாராயணன் ஒரு முதுகலைப் பட்டதாரி. ஆசிரியருங்கூட.

திருமதி வள்ளியம்மை ஆச்சி உடுமலைப்பேட்டை விசாலாட்சி கல்லூரியில் படித்து கணிதப் பட்டதாரி ஆனார். பின்னர் சரித்திரத்தில் முதுகலைப் பட்டமும் கல்வியியலில் முதுகலைப் பட்டமும் பெற்றார் டாக்டர் அழகப்பர் பயிற்சிக் கல்லூரியில் ஆசிரியப் பயிற்சிப் பட்டமும் பெற்றவர். 5 ஆண்டுகள் ஆசிரியப் பணிக்குப் பிறகு 1968ல் கோட்டையூர் சிதம்பரம் செட்டியார் பெண்கள் மேனிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியையாக நியமனம் பெற்றார்.

இவரது திறமையான - தரமான கல்விப் போதிப்பில் இப் பள்ளி பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் 12 முறை நூறு சதவிகித வெற்றியையும் 8 முறை தொண்ணூற்றைந்து சதவிகிதத்திற்கு மேலான வெற்றியையும் 8 முறை மாவட்ட அளவிலான வெற்றியையும் பெற்றுள்ளது. பிளஸ் டூ பொதுத் தேர்வில் 5 முறை நூறு சதவிகித வெற்றியையும் பெற்றுள்ளது.

தன்னுடைய சிறப்புக்களுக்கு பள்ளியின் நிறுவனரும் செயலாளரும் உறுதுணையாக இருந்து வருவதாகக் கூறும் திருமதி வள்ளியம் ஆச்சி பெண் கல்வியின் அவசியத்தை வலுயுறுத்துகிறார்.

இவருக்குக் கணவரும் பொறியியலில் பட்டம் பெற்ற ஒரு புதல்வி



யும் பள்ளியில் பயிலும் ஒரு புதல்வனும் உள்ளனர்.

நல்லாசிரியர் விருது பெற்ற திருமதி வள்ளியம்மை ஆச்சியைப் பாராட்டுகிறோம்.

சந்திப்பு: வெ. நாராயணன்
காரைக்குடி

குறளும் குடி பற்றிய குறளும்!

''கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக'' என்றார் திருவள்ளுவர்.

''போடுக கள்பிராந்தி விஸ்கி
போட்டபின் ஆடுக அதற்குத் தக''
என்று கூறும் வகையில் பலர் இருந்து வருகின்றனர்.

— **பேராசிரியர் சுப. கதிரேசன்**

(பட்டினத்தடிகள் திருவிழாவில்)

4 நாட்கள் பிரயாணம்: மதுரை - திருச்செந்தூர் - கன்னியாகுமரி - சுசீந்திரம் - திருவனந்தபுரம் (தங்கல்) - வர்க்கலா - பந்தளம் - ஆரன்முலா - எருமேலி (தங்கல்) - பம்பை - சன்னிதானம் (தங்கல்) - செங்கோட்டை - மதுரை.

23—12—90 To 26—12—90 & 5—1—91 To 8—1—91

நாள் 4க்கு பஸ் கட்டணம் சாப்பாடு தங்கும் சிலவு உள்பட நபர் 1க்கு ரூ. 350/-

அரைக் கட்டணம் ரூ. 280/-

6 நாட்கள் ஸ்ரீ மூகாம்பிகை - ஐயப்பன் தெரிசனம்

29—12—90 To 3—1—91

மதுரை - பன்னூரி - மைசூர் - சுப்பிரமண்யா - உடுப்பி - மூகாம்பிகை - குருவாயூர் - திருப்பரையாறு - கொடுங்களூர் - காலடி - சோட்டாணிக்கரை - எருமேலி - பம்பை - சன்னிதானம் - செங்கோட்டை - மதுரை.

நாள் 6க்கு பஸ் கட்டணம், சாப்பாடு, தங்கும் சிலவு உள்பட நபர் 1க்கு ரூ. 530/-

அரைக் கட்டணம் ரூ. 420/-

4 நாட்கள் பெரிய பாதைப் பயணம்

5—1—91 To 8—1—91

மதுரை - குற்ருலம் - ஆரியங்காவு - எருமேலி - பெரிய பாதையில் கரிவலம்தோடு (தங்கல்) - பம்பை - சன்னிதானம் (தங்கல்) - செங்கோட்டை - மதுரை.

நாள் 4க்கு பஸ் கட்டணம் சாப்பாடு உள்பட நபர் 1க்கு ரூ. 350/-

அரைக் கட்டணம் ரூ. 280/-

6 நாட்கள் மகர ஜோதி - பெரிய பாதைப் பயணம்

11—1—91 To 16—1—91

மதுரை - திருமூர்த்திமலை - குருவாயூர் (தங்கல்) - திருப்பரையாறு - கொடுங்களூர் - காலடி - சோட்டாணிக்கரை - வைக்கம் - ஏட்டுமானூர் - எருமேலி (தங்கல்) - பெருவழிப் பாதையில் முக்குழி (தங்கல்) - பம்பை அடைந்து ஜோதி பார்த்தல் (தங்கல்) - சன்னிதானம் (தங்கல்) - செங்கோட்டை - மதுரை.

நாள் 6க்கு பஸ் கட்டணம், 4 வேளை ஆகாரம், தங்கும் வசதி உள்பட நபர் 1க்கு ரூ. 540/-

அரைக் கட்டணம் ரூ. 430/-

2 நாட்கள் சபரிமலைப் பயணம்

9—1—91 To 10—1—91

மதுரை - குமுளி - எருமேலி - பம்பை - சன்னிதானம் (தங்கல்) - செங்கோட்டை - மதுரை.

நாள் 2க்கு பஸ் கட்டணம், 4 வேளை ஆகாரம் உள்பட நபர் 1க்கு ரூ. 190/-

அரைக் கட்டணம் ரூ. 150/-

குறிப்பு :

நபர் 1க்கு ரூ. 100/- வீதம் அட்வான்ஸ் அனுப்பிப் (பெயர், வயது, விலாசத்துடன்) பதிவு செய்ய வேண்டுகிறோம்.

கம்பம் கந்தர் சஷ்டி விழா

கம்பம் காசிவிஸ்வநாதர் கோயில் ஆறுமுகப் பெருமானுக்குக் கம்பம் நகரத்தார் சங்கத்தின் சார்பில் கந்தர் சஷ்டித் திருவிழா ஐந்தாம் ஆண்டாகக் கொண்டாடப் பெற்றது. 19-10 90 முதல் 25-10-90 முடிய ஒருவாரம் 'காசிஸ்ரீ' அரு. சோமசுந்தரன் அவர்கள் ''திருவிளையாடற் புராணம்'' பற்றித் தொடர் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். நிறைவு நாளன்று கம்பம் பெரியவர் திரு. மணிப்பிள்ளை தலைமையில் பொற்கிழிக் கவிஞருக்கு நகரத்தார் சங்கத்தின் சார்பிலும் பொது மக்கள் சார்பிலும் சிறப்புச் செய்யப் பெற்றது.

கம்பம் வட்டார நகரத்தார் சங்கம்

கம்பம் நகரத்தார் சங்கத்தின் கூட்டம் 22-10-90 அன்று திரு. அ. இராமநாதன் செட்டியார் தலைமையில் நடைபெற்றது. திரு. எல். சுப்பய்யா வரவேற்றார். 'பொற்கிழிக் கவிஞர்' திரு. அரு. சோமசுந்தரன் சிறப்புரை ஆற்றினார். கவிஞருக்கு திரு. அ. இராமநாதன் செட்டியார் பொன்னாடை போர்த்தினார். திரு. எஸ்பி. இராமநாதன், திரு. ஆர். இராமநாதன், திரு. சித. இராமநாதன் ஆகியோர் பேசினர். சபரிமலையில் நகரத்தார் விடுதி கட்டும் பொறுப்பினை திரு. முத்து கரு. முத்தையா செட்டியார் அவர்களிடம் ஒப்படைக்கப் பெற்றது செயலர் திரு. சுப. சின்னசெட்டியப்பன் நன்றி கூறினார். வரும் ஆண்டிற்கு திரு. எஸ்பி. இராமநாதன் தலைவராகவும், திரு. ஆர். இராமநாதன் துணைத் தலைவராகவும் திரு. லெ. சுப்பய்யா செயலாளராகவும், திரு. சுப. சின்னசெட்டியப்பன் பொருளாளராகவும் ஒருமனதாகத் தேர்வு செய்யப் பெற்றனர்.

திருத்தம்

''நகரத்தார் குரல்'' அக்' 90 இதழ் - பக்கம் 44ல் 'பாராட்டுகிறோம்' என்ற தலைப்பில் வெளியுடப்பெற்றுள்ள செய்தியில் ஆத்தங்குடியைச் சேர்ந்த என்பதை புதுவயலைச் சேர்ந்த என்றும் இரண்டாவது பாராவில் 1988 மே என்பதை 1988 மார்ச் என்றும் திருத்தி வாசிக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

வெப்பு நோய் தணிந்தது!

நான்காண்டுகளுக்கு முன்பு இங்கு (காவிரிப்பூம்பட்டினத்தில்) தாயார் (ஞானகலாம்பிகை) தகன நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பட்டினத்தார் தன் தாய் மீது பாடிய இரங்கற் பாடல்கள் பத்தையும் பாடினேன். ஞானத் தீ மூட்டியபோது எனக்குப் பல ஆண்டுகளாக வயிற்றில் தீயாக இருந்து வந்த வெப்பு நோய் (அல்சர்) அதுமுதல் தணிந்து வயிற்றில் குளிர்ச்சி ஏற்பட்டது. தாயார் உடலில் தீ பற்றியதும் என் வயிற்றில் இருந்த தீ தணிந்தது, இந்தப் பட்டினத்தாரின் திருவருள். அதனால்தான் இதை அற்புதத் திருவிழா என்கிறார்கள்.

— காசிஸ்ரீ அரு. சோ.

(காவிரிப்பூம்பட்டினத்தில் 8 ஆம் திருநாள் நிகழ்ச்சியின்போது)

பகுத்தறிவுவாதியும் ஆன்மீகவாதியும்

வை. சு. சண்முகனார் நூல் மிகச் சிறப்பான ஒன்று. இது நகரத்தார் களுக்கு மட்டும் அல்ல; தமிழர்களுக்கே ஒரு வழிகாட்டி. ஆகவே இந்த நூலை பள்ளி மாணவர்களுக்கு விருப்பப் பாடமாக வைக்க வேண்டு மெனக் கல்வி அமைச்சரை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

வானதி 2500 நூல்களை வெளியிட்டிருக்கிறது. அதில் என்னு டைய நூல்கள் மூன்றும் அடங்கும். அதற்காக மகிழ்ச்சி அடைகிறேன். வை. சு. சண்முகனார் நூலை வெளியிட்டமைக்காகக் தலை வணங்கு கிறேன்.

வை. சு. ச. குடும்பத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் நீண்ட நாட்களாகத் தொடர்பு உண்டு. 1930 ஆம் ஆண்டு. வை. சு. ச. மிகச் செழிப்பாக வாழ்ந்த காலம். மலேஷியாவில் எங்கள் கடையில் அவர்கள் ஒரு தொகையை அடைத்து வைத்திருந்தார்கள். அப்போது எங்கள் ஐயா வள்ளியப்ப செட்டியாரவர்கள், கையெழுத்து லெட்டர் எழுதிய போது வை. சு. ச. வேண்டாமென்று சொல்ல, அதற்கு எங்கள் ஐயாவும் ''நகரத்தார் மரபு அது தானே'' என்று கேட்க, ''நான் பேங்கைக் கூட நம்பாமல் தங்களை நம்பி அடைத்து வைத்திருக்கிறேன். மையினுல் எழுதியதை அழிக்க ரப்பரைக் கண்டுபிடித்து விட்டார்கள். சொன்ன சொல்லை அழிக்க இன்னும் எதுவும் கண்டுபிடிக்கவில்லை. ஆகவே எந்த லெட்டரும் வேண்டாம். ரிசர்வ் பண்டாக வைத்திருந்து என் பிள்ளைகள் தேவைப்பட்டுக் கேட்கும்போது கொடுத்தால் போது மென்று சொல்லிவிட்டு கையெழுத்து லெட்டர் வாங்காமலேயே சென்று விட்டார்களாம். அதன் பிறகு வை. சு. ச. தளர்ச்சி பெற்ற காலத்திலும் கேட்கவில்லை. 1954 ஆம் ஆண்டு நான் மூவாரில் கொண்டுவித்த காலம். சோலை என்பவர் தன்னை வை. சு. ச. வின் மகன் என்றும் சிங்கப்பூர் ஸ்டெரியிட் டைம்ஸில் பணி புரிவதாக வும் அறிமுகப்படுத்திக்கொண்டு வந்தார். நான் உடனே வட்டிச் சிட்டை பணத்தைக் கொடுத்தேன். அப்போது அவர் ''என்னுடைய தந்தை பகுத்தறிவுவாதி. யாரிடம் பணம் கொடுத்தால் நல்லமுறையில் திரும்பி வரும் என்று பகுத்தறிந்து கொடுத்தார். அதன்படி பணமும் திரும்பி வந்தது. நன்றி மகிழ்ச்சி'' என்று சொன்னுர். எங்கள் ஐயா வ. அவர்கள் வை. சு. ச. வின் வரவு, கையெழுத்து லெட்டர் இல்லா தது ஆகவே அவர்கள் கேட்டால் தனது வாரிசுகள் உடனே கொடுக்க வேண்டுமென்று எழுதி வைத்திருந்தார்கள். எங்கள் ஐயா சீர்திருத்த வாதி அல்ல. பகுத்தறிவு வாதியும் ஆன்மீகவாதியும் நாணயம் என்ற ஓரணியில் சேர்ந்திருந்தனர். அந்தக் காலத்தில் இப்படி நகரத்தார் வாழ்ந்திருக்கிருர்கள்.

1971ஆம் ஆண்டு. நான் மதுரையில் ரியல் எஸ்டேட் செய்து கொண்டிருந்தேன். ஒரு நகரத்தார் இடம் என்ன விலை என்று என் மானேஜரிடம் கேட்க, சொன்ன விலைக்கு அட்வான்ஸ் கொடுத்து விட்டுப் போய் விட்டார். ''அவர்கள் குறைத்துக் கேட்கவில்லையா?''

கவியரசர் கண்ணதாசன் திருப்பள்ளி யெழுச்சி!



மேனுள் கடலிடைத் துஞ்சிய கதிரோன்
மென்மலர் பனித்துளி விசிறலில் விழித்தான்!
நானு விதக்குரல் எழுப்பிய புள்ளின்
நாதநல் மழையினில் நனைந்தது புவனம்!
பேனு முனைகொடு, பெருகிய அறிவால்
பேசரு தத்துவம் ஆசற வோங்கி
கானு ருய்ப்பொழி கவித்துவத் தீஞ்சொல்
கவியர சே! பள்ளி யெழுந்தரு ளாயே!

ஆயர்தம் குழலிசை ஆர்த்தது! நாவின்
அசைவினில் தளைதவிர் ஆனிறை செல்ல,

என்று என் மானேஜரிடம் கேட்டேன். ''இல்லை'' என்று சொன்னார். அப்போது நான் அவரைப் பார்க்க வேண்டுமென்று சொல்லி அவர் வீட்டிற்குச் சென்று பார்த்தேன். அவர்கள் டாக்டர் மணிமேகலையும் டாக்டர் வி. ஆர். மாதவனும் ஆவார்கள். டாக்டர் மணிமேகலை வை. சு. ச. வின் பேத்தி ஆவார்.

1976 ஆம் ஆண்டு. நான் திரைப்படம் எடுக்க நினைத்து ஒரு டைரக்டரை அணுகினேன். அவர் ''உங்கள் குணத்திற்கு படம் எடுக்க வேண்டாம். திரையரங்கை மட்டும் நடத்துங்கள். அதில் அதிக இலாபமில்லை என்றாலும் நஷ்டமே வராது. மகிழ்ச்சியாக இருக்க லாம்.'' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார். திரையுலகில் இப்படிப் பட்டவர்களும் இருக்கிறார்களா என்று ஆச்சரியப்பட்டேன். அவர் தான் டைரக்டர் எஸ்பி. முத்துராமன் அவர்கள். வை. சு. ச. வின் பேத்தியின் கணவர்.

1988ஆம் ஆண்டு என் மாப்பிள்ளை பெரியகருப்பன் அவர்கள், தான் கடை வைத்திருந்த வீட்டை விலை பேசியபோது வீட்டின்

பாய்கதிர் இளவெயில் படர்ந்தது ! நந்தம்
பைந்தமி ழாலிறை பரவிடும் அடியார்
தூயநல் லிசையினில் துலங்கின கோவில் !
தொழில்மனை தொறும்பல தொண்டர்கள் சூழ்ந்தனர் !
காய்சினம் நீக்கிநற் கனிமுகம் காட்டும்
கவியர சே ! பள்ளி யெழுந்தரு ளாயே !

சுவைநற வுதிர்தரத் தோன்றின பூக்கள் !
சுடர்க்கதி ரொளியினில் துன்னிருள் நீங்க,
தவநிறை தமிழ்வளம் தழைத்தது ! சங்கும்
தாளமும் பாடலும் தழுவின எங்கும் !
நவநவப் புதுமைகள் நண்ணின ! கோடி
நற்றிறம் வளர்ந்தன ! நகைமுகத் தோடு
கவலையைத் தூசெனக் கருதிடு செஞ்சொல்
கவியர சே ! பள்ளி யெழுந்தரு ளாயே !

எங்கணும் நல்லொலி ! எங்கணும் துள்ளல் !
ஏந்தின மேழிகள் உழவர்தம் தோள்கள் !
மங்கல மஞ்சளும் மலர்களும் சூடி
மாதர்தம் செங்கைகள் வளையிகை யோடு
அங்கணில் எழுதிய அஞ்சனம் மின்ன,
அணிமனை வீதியில் வனைந்தனர் கோலம் !
கங்குலை நீக்குபொற் கவியொளி பெய்த
கவியர சே ! பள்ளி யெழுந்தரு ளாயே !

கனையிளங் கன்றுகள் மடியினை முட்ட,
கறந்தன ஆவினம் ! குடம்நிறை வுற்ற !
மனைதொறும் சிறுமியர் சிறுவர்கள் சேர்ந்து
மாத்தமிழ் அனைதிரு மங்கலம் பாட,
புனையெழிற் கோதையர் கனிமுகம் போல
பூவுல கெங்கணும் பூத்தது காலை !
உனைவெல, இங்குனக் கொப்பவர் இல்லா
உயர்கவி யே ! பள்ளி யெழுந்தரு ளாயே !

— மு. நா. நாராயணன், காரைக்குடி

உரிமையாளர் மாடி போர்ஷனையும் காலி செய்து என் மாப்பிள்ளை யிடமே கொடுத்துவிட்டு இருவருக்கும் நண்பரான திரு. வெங்கா அவர்கள் சொல்கிறபடி தொகை வாங்கிக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்கள். வெங்கா அவர்கள் வந்தார்கள். விலையைச் சொன்னார்கள். இருவரும் கேட்டுக் கொண்டார்கள். அவர் தான் வை. சு. ச. வின் பேரன் ஷண்முகம் அவர்கள்.

இப்படி எங்கள் குடும்பத்திற்கும் வை. சு. ச. குடும்பத்திற்கும் தலைமுறை தலைமுறையாகத் தெரிந்தும் தெரியாமலும் வந்த தொடர்பு இன்னும் பல தலைமுறை நீடிக்க அன்னை மீனாட்சியை வணங்குகிறேன்.

— **வி. என். சிதம்பரம் செட்டியார்**

(சென்னையில் 2–10–90 அன்று நடைபெற்ற சீர்திருத்தச் செம்மல் வை. சு. சண்முகனார் வாழ்க்கை வரலாற்று நூல் வெளியீட்டு விழாவில் நமது இதழின் ஆசிரியர் பேசியது.)

துலாவூரில் குருபூஜை

நகரத்தார் பெண்கள் குருபீட மாகிய துலாவூர் ஆதீனத்தில் ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிக சுவாமி களின் குருபூஜை 5-10-90 அன்று சிறப்பாக நடைபெற்றது. துலா வூர் சுவாமிகள், கலாமடம் பாதரக் குடி சுவாமிகள், காளையார் கோவில் சுவாமிகள் ஆகியோர் அருளாசி வழங்கினர். பொற்கிழிக் கவிஞர் திரு. அரு. சோமசுந்தரன் வரவேற்றார். திருவருட்செல்வர் இராம. ஏகப்பன், திருவருட் செல் வர் அழ. சி. அழகப்பன், 'இரசிக மணி' இராம. சிதம்பரம் செட்டி யார், காசிஸ்ரீ' வயிரவன், காசிஸ்ரீ வெ. அருணசலம் செட்டியார் பேராசிரியர் சொ. அரிய நாயகம், ''விகடம்'' காசிச் செட்டியார் ஆகியோர் உரையாற்றினர். சைவப் பெரியார் அலவாக் கோட்டை பழ. நாக. இராமநா தன் செட்டியார் அவர்களுக்குத் துலாவூர் ஆதீனத்தின் சார்பில் துலாவூர் சுவாமிகள் ''அறமனச் செம்மல்'' என்றபட்டத்தை வழங் கிப் பொன்னுடை போர்த்திச்சிறப் பித்தார்கள். திரு. பழ. நாக. இராமநாதன் செட்டியார் துலா வூர் ஆதீன டிரஸ்டுக்கு ரூ. 5000 நன்கொடை வழங்கினர். திரு. சோம. நாராயணன் செட்டியார் நன்றிகூறினர். நகரத்தார் பெண் கள் பஜனைப் பாடல்கள், தாலாட் டுப் பாடல்களைப் பாடினர். செல்வி மாலதி இராமநாதனின் நடன நிகழ்ச்சி நடைபெற்றது. 'இரசிக மணி' திரு. இராம. சிதம்பரம் செட்டியார் தலைமையில் கட்டிடக் குழு அமைக்கப் பெற்றது.

மணி விழா

இராங்கியம் திரு. சித. லெ. சிதம்பரம் செட்டியார் - திருமதி ராஜாமணி ஆச்சியின் 60 ஆம் ஆண்டு நிறைவு மணிவிழா 12-10-90 அன்று பிள்ளையார்பட்டி யில் சிறப்பாக நடைபெற்றது.

ஃ ஃ ஃ

குருவிக்கொண்டான்பட்டி பெரி. ராம. ஜெகநாதன் செட்டி யார் அவர்களுக்கும் திருமதி ஜெ. ஆனந்தவள்ளி ஆச்சி அவர்களுக் கும் 26-10-90 அன்று குருவிக் கொண்டான்பட்டியில் 60 ஆம் ஆண்டு நிறைவு மணிவிழாச் சிறப் பாக நடைபெற்றது. மணி விழா வையொட்டி நமது இதழின் ஆசிர் யர் வி. என். சிதம்பரம் செட்டியாரி அவர்கள் தலைமையில் வாழ்த்தரங் கம் நடைபெற்றது. இரவு டாக்டர் விஜயலெட்சுமி நவநீத கிருஷ்ணன் குழுவினரின் கிராமியக் கலை நிகழ்ச் சியும் பஞ்சமூர்த்தி திருஉலாக் காட்சியும் நடைபெற்றன.

உப்பூரில் சதுர்த்தி விழா

உப்பூர் ஸ்ரீ வெயில் உகந்த விநாயகர் கோயிலில் சதுர்த்தி விழா பத்து நாட்கள் சிறப்பாக நடைபெற்றது. 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் ''மகாபார தம்'' பற்றி 18-8-90 முதல் 24-8-90 முடிய தொடர் சொற் பொழிவு நிகழ்த்தினர் திரு சோம. நாராயணன் இதற்கான ஏற்பாடு களைச் செய்திருந்தார். இக்கோயில் ஸ்ரீ ராமபிரான் வழிபட்டது. தேவ ஏஎல். ஏஆர். கோட்டை குடும்பத் திருப்பணியாகும்.

எக்ஸ்போ பிரிண்டர்ஸ் 20, கிருஷ்ணபுரம் 4-வது குறுக்குத் தெரு மதுரை-625 009 ல் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் 25, வடக்குச் சித்திரை வீதி, மதுரை-625 001லிருந்து வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : வி. என். சிதம்பரம்.

Regd. No. TN/MA/(C)/106 NAGARATHAR KURAL